
www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு : 14,15 திபி. 2031 சிலை - திபி. 2032 சுறவம்
மடல் : 12-1 கிபி. 2000 திசம்பர் - கிபி. 2001 சனவரி விலை : ரூ 6.00



## தை முதலே தமிழ்ப் புத்தாண்டு

படிப்பகம்

www.padippakam.com

# தை முதல் நாளைத் தமிழ்ப்புத்தாண்டு நாளாக அறிவிக்க வேண்டும்

வடக்கத்திய - பார்ப்பனியப் பண்பாட்டுப் படையெடுப்பால், தமிழர்களின் கலை, பண்பாடு, அறிவியல் மற்றும் அடையாளம் அனைத்தும் சீரழிக்கப்பட்ட வரலாறு, தமிழகம் அறிந்ததே.

தமிழர்களை இழிவுபடுத்தாத பண்டிகைகள், தமிழர்க்கென்று ஆண்டு வரிசை என பலவற்றை நாம் இழந்துள்ளோம். தமிழ் ஆண்டுகள் என்று சித்திரை முதல்நாள் தொடங்கும் பிரபவ, விபவ என 60 ஆண்டுகள் சொல்லப்படுகின்றன.

இந்த ஆண்டுகள் பிறந்ததற்கான புராணக்கதை மிகவும் கேவலமானது. இரண்டு ஆண்களுக்கிடையே (மகாவிஷ்ணு - நாரதர்) பாலுறவு. அதனால் இவைகளின் பிறப்பு. அதுமட்டுமல்லாது மொத்தமே 60 ஆண்டுகள்தாம் திருப்பித் திருப்பித் சுழன்று வருகின்றன. இதை வைத்து, வரலாற்று நிகழ்வுகளை எவ்வாறு கணக்கிட முடியும்?

எனவே, கேவலமில்லாத, வளர்ந்து வரும் எண்ணிக்கை முறையைக் கொண்ட ஆண்டு வரிசை தமிழர்களுக்குத் தேவை. இத்தேவையை நிறைவு செய்யும் வகையில் தமிழ் அறிஞர்கள் திருவள்ளுவர் ஆண்டு முறையைக் கொண்டு வந்தனர். கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்று கணக்கு வைத்து இவ்வாண்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போதுதான் திருவள்ளுவர் பிறந்தார் என்பதற்கு சர்ச்சைக்கிடமில்லாத சான்றாதாரங்கள் உண்டா என்று கேட்பதை விட, அந்த ஆண்டு முறை தேவையாய் இருக்கிறதா இல்லையா என்று கேட்டுக் கொள்வது பயனுள்ளது.

எனவே, ஒட்டுமொத்தமாகத் தமிழர்கள் அனைவரும் திருவள்ளுவராண்டு முறையை ஏற்றுக் கொள்ளலாம். திருவள்ளுவர் நாளாக ஏற்கெனவே சுறவம் (தை) 2 ஆம் நாள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. சுறவம் (தை) 1 ஆம் நாளே தமிழ்ப் புத்தாண்டு தொடக்க நாள்.

அந்நாள் பல முக்கியத்துவங்களைக் கொண்டுள்ளது. வான இயல்படி, சூரியன் அன்று முதல் தெற்கேயிருந்து (தட்சியாயணம்) வடக்குநோக்கி (உத்தராயணம்) நகரத் தொடங்குகிறது. அறுவடைத் திருநாளாம், தமிழர் திருநாளாம் பொங்கல் நாள் அன்று வருகிறது.

எனவே, தமிழக அரசு வரும் தை முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாளாக அதிகாரப் பூர்வமாக அறிவிக்க வேண்டும். இக்கோரிக்கைத் தமிழ் அறிஞர்களாலும் தமிழ் உணர்வாளர்களாலும் பல்லாண்டு காலமாக எழுப்பப்பட்டு வருகிறது. தீபாவளி 'போனசை' பொங்கல் விழா போனசாக வழங்க வேண்டும் என்பதும் தமிழ் உணர்வாளர்களின் கோரிக்கை.

தி.பி. 2032 ஆம் ஆண்டிலிருந்து அக்கோரிக்கைகளைத் தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்.



## நிறைகுறை

### அருமை

தஞ்சை கு. ராமகிருஷ்ணன் எழுதிய கட்டுரை அருமை. நாட்டில் நடக்கும் உண்மை நிகழ்ச்சினை நறுக்கென்று சுருக்கமாகக் கூறியிருந்தார்.

- நிம்மேலி பால.கண்ணன், தஞ்சை.

### பாரமரனுக்கும் புரியும் வகையில்.....

அ.வளவன் எழுதிய கல்வியில் மதவாதம் கட்டுரைக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் முரளி மனோகர் ஜோசி சாய்பாபா காலடியில் விழும் படம் வெளிவந்துள்ளது நன்று.

அநீதியின் உச்சக்கட்டம் கட்டுரையில் உள்ள செய்திகள் நடைமுறைக்கு உகந்தனவே.

பாமரனுக்கும் புரியும் வகையில் எளிமையாய் கி.வெ. நர்மதை ஆற்றுச் சிக்கலை விளக்கியுள்ளார்.

- இரெ. இராசகணேசன், மன்னார்குடி.

## திருக்குறள் மாநாடு

கடந்த நளி 16,17,18 ஆகிய (திசம்பர் 1,2,3) நாட்களில் சென்னை - செருமன் அரங்கில், கோயிலூர் ஆதீனத்தின் சார்பில் திருக்குறள் மாநாடு நடைபெற்றது. முதல் நாள் (வெள்ளி) மாலை முனைவர் பொற்கோ தலைமையிலும் நாச்சியப்ப அடிகள் முன்னிலையிலும் தொடங்கிய கால்கோள் அரங்கத்தைத் தொடர்ந்து பின்னிரு நாட்களிலும் அறவியல், இன்பவியல் அரங்கங்களும் நிறைவரங்கமும் நடைபெற்றன.

அமைச்சர்கள் பேரா.க. அன்பழகன், முனைவர் மு. தமிழ்க்குடிமகன் ஆகியோரும், மருத்துவர் இராமதாசு, திரு வைகோ, திரு பெ. மணியரசன், முனைவர் சுப.வீரபாண்டியன், வலம்புரிசான், முனைவர் தமிழண்ணல், சொல்லாய்வு அறிஞர் அருளியார் உள்ளிட்டோர் நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டரசு தமிழ்வழிக் கல்விக்குச் சட்டம் கொணர வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு பழ. கருப்பையா மாநாட்டு ஒருங்கிணைப்புப் பணிகளைச் செய்திருந்தார்.

படிப்பகம்

தமிழர் கண்ணோட்டம்

திசம்பர் 2000 - சனவரி 2001

தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை
கொடுப்போம்
தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம்
படைப்போம்

# நேபாளக் கிளர்ச்சி காட்டும் உண்மை

இந்தி நடிகர் கிர்த்திக் ரோசன் நேபாள நாட்டையும், நேபாளி மக்களையும் இழிவாகப் பேசினார் என்று குற்றம் சாட்டி நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் எழுந்த மாணவர் போராட்டம், பெரும் கிளர்ச்சியாக மாறிவிட்டது. திசம்பர் கடைசிவாரம் முழுவதும் காத்மாண்டு நகரமே போர்க்களமாகக் காட்சியளித்தது. துப்பாக்கி சூட்டில் ஐந்து மாணவர்கள் பலியாயினர்.

நடிகர் கிர்த்திக் ரோசன் தொலைக்காட்சி பேட்டியில் தான் அவ்வாறு பேசவில்லை என்று விளக்கம் அளித்தார். இருந்தபோதிலும் கிளர்ச்சி தொடர்ந்தது. பொதுவுடைமைக் கட்சியின் மாணவர் பிரிவு முயற்சியில் மாணவர் போராட்டமாக வெடித்தது, இன்று ஆளுங்கட்சிக்குள்ளேயே பிளவாக மாறியிருக்கிறது. நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா பதவி விலக வேண்டும் என்று கோரி இரண்டு நாள் முழு அடைப்பும் நடந்தது.

வழக்கம் போல் இந்திய அரசு இந்தப் போராட்டம் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. சதி என்று தீர்ப்பு கூறிவிட்டது. ஆனால் நேபாள அரசோ இப்போதுதான் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தப் போராட்டம் கிர்த்திக் ரோசன் மீது குற்றம் சாட்டி தொடங்கியிருந்தாலும், இதனால் மட்டும் இது நடந்துவிடவில்லை. நீண்ட நாளாக இந்திய அரசின் மீது இருந்த வெறுப்பு இவ்வாறு வெடித்திருக்கிறது.

இந்திய - நேபாள வர்த்தக ஒப்பந்தம் நேபாள நலனுக்கு எதிரானது என்ற கசப்புணர்வு இருந்து வருகிறது. இந்தியப் பாதுகாப்பில் உள்ள நாடாக நேபாளம் இருப்பதால், அந்நாடு ஒரு அடிமை நாட்டைப் போல் நடத்தப்படுகிறது என்ற வெறுப்பும், நேபாளத்தின் இயற்கை வளங்களை இந்தியா சுரண்டுகிறது என்ற எதிர்ப்பும் தொடர்ந்து இருக்கிறது. காத்மாண்டுவுக்கு அருகில் கட்டப்பட்டுவரும் நீர் மின் நிலையத்திற்கு எதிர்ப்பு கிளம்பியது இங்கு நினைவு கூரத்தக்கது.

காத்மாண்டு கடைத் தெரு சென்னை சௌகார்பேட்டையைப் போல காட்சியளிக்கிறது. நேபாள நாடு மார்வாடி குஜராத்தி சேட்டுகளின் வேட்டைக் காடாக மாறிவிட்டது. அதனால்தான் கிளர்ச்சியின் போது இந்தக் கடைகள் தாக்கப்பட்டிருக்கின்றன. இதனை இந்தியர்கள் தாக்கப்பட்டதாக அரசும், பத்திரிகைகளும் சித்தரிக்கின்றன. இதன் மூலம் இந்தப் போராட்டத்தை இந்திய மக்களுக்கு எதிரான கிளர்ச்சியைப் போலக்காட்டி தமது ஆதிக்க நோக்கத்திற்கு ஆதரவாக மக்கள் கருத்தைத் திரட்ட அரசு முயல்கிறது.

பா.ஜ.க. துணைத் தலைவர் கே. ஆர் மல்கானி நேபாளத்தை இந்தியாவுடன் இணைத்திருக்க வேண்டும் என்று பேசினார். அதற்கு எதிர்ப்பு கிளம்பியவுடன் பின்வாங்கினார். இது பா.ஜ,க. தலைமையின் அகண்ட பாரதக் கனவின் பிரதிபலிப்பே ஆகும்.

இந்திய அரசு இந்த அணுகு முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். நேபாளத்தின் மீதான தமது ஆதிக்க நடைமுறைகளைக் கைவிட வேண்டும். சமத்துவ நிலையில் நேபாளத்தோடு பேசி சமரசம் காண வேண்டும்.

அது ஒன்றுதான் நேபாள மக்கள் மத்தியில் இந்தியாவுக்கு எதிராக உள்ள கசப்புணர்வைப் போக்க உதவும்.



அனைத்துத் தொடர்புகளுக்கும்
**பெ. மணியரசன்**
ஆசிரியர்,
150 அ சமீன்தார் குடியிருப்பு,
(பழைய எண் 53 அ)
புது ஆற்றுச் சாலை
தஞ்சாவூர் - 613 001.
தொ.பே. : 32994

அச்சிட்டோர்
**நீட் பிரிண்டர்ஸ்**
சென்னை - 600 003.

வடிவமைப்பு
**காவிரி கணிப்பொறி அச்சு,**
தஞ்சாவூர் - 613 001.
தொ.பே. : 70018
e-mail: kannotam@md5.vsnl.net.in

www.padippakam.com

# முகமூடி கிழிந்த வாஜ்பாயும் தொடரும் நாற்காலிக் கூட்டணியும்

- கி. வெங்கட்ராமன்

'மிதவாதி' என்றும் 'சனநாயகத்தை மதிப்பவர்' என்றும் வாஜ்பாய்க்கு அவரது கூட்டணிக் கட்சிகள் அணிவித்த முகமூடி இன்று கிழிந்து தொங்குகிறது. தான் பார்ப்பனிய - இந்துத்துவ வெறியர்தான் என்பதை வாஜ்பாய் வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். பாபர் மசூதியை இடித்து அந்த இடத்தில் இராமர் கோயில் கட்டியது "தேசிய உணர்ச்சியின் வெளிப்பாடு" என்றும், "இந்தப் பணி இன்னும் நிறைவடைய வேண்டும். அயோத்தியில் இந்துக்கள் அனுமதிக்கும் வேறொரு இடத்தில் பாபர் மசூதியைக் கட்டிக் கொள்ளலாம்" என்றும் வெறித்தனமாகப் பேசினார் வாஜ்பாய்.



அட்டல் பிகாரி அத்வானி ?

லால் கிருஷ்ண வாஜ்பாய்?

தி.மு.க. உள்ளிட்ட பல மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்து ஆட்சியைப் பிடித்த பாரதிய ஜனதா, பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்டுவது, பொது சிவில் சட்டம், காசுமீருக்கு சிறப்பு நிலை அளிக்கும் அரசமைப்பு விதி 370ஐ நீக்குவது என்ற தனது வகுப்புவாத செயல் திட்டங்களை ஒத்தி வைப்பதாகவும், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொது செயல் திட்டத்தை மட்டுமே செயல்படுத்தப் போவதாகவும் அறிவித்தது.

ஆனால் வாஜ்பாய் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்தியாவெங்கும் கிறித்துவர்கள் மீது தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டன. ஒரிசாவில் 1999 சனவரியில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் பாதிரியார் கிரகாம் ஸ்டெயின்சையும் அவரது இரு மகன்களையும் உயிரோடு எரித்துக் கொன்றது. மத்தியப் பிரதேசத்தில் தமிழகத்தைச் சேர்ந்த கிறித்துவப் பெண் துறவியர் நான்கு பேரை ஆர்.எஸ்.எஸ் வெறியர்கள் வல்லுறவு கொண்டு, பின் கொன்றனர். இதனை தேசபக்த நடவடிக்கை என்று விசுவ இந்து பரிச்சத் தலைவர்களில் ஒருவரான பி.எல் சர்மா வர்ணித்தார். பாதிரியார்களும், பெண் துறவியரும் இந்துக்களை மதமாற்றம் செய்வதால் ஆத்திரம் கொண்ட தேசபக்த இளைஞர்களின் நடவடிக்கை இது என்று பா.ஜ.க. தலைவர்கள் பலர் கற்பழிப்புக்கு மனிதத்தன்மையற்று பரிந்து பேசினர்.

இதனால் உற்சாகம் அடைந்த இந்துத்துவ வெறியர்கள் உ.பி. அரியானா, பஞ்சாப், ஆந்திரா, கர்நாடகா, கோவா போன்ற பல மாநிலங்களில் கிறித்துவ வழிபாட்டிடங்கள் மீது தாக்குதல் நடத்தினர். மாதா கோயில்கள் தாக்கி அழிக்கப்பட்டன. குஜராத்தில் கிறித்துவ தேவாலயங்களில் உள்ளே புகுந்து இயேசு நாதர் மற்றும் மேரி சிலைகளை உடைப்பதும், அங்கு அனுமார், இராமர் படங்களை வைப்பதும், தேவாலயங்களின் மீதுள்ள சிலுவையை இடித்து விட்டு அங்கு காவிக்கொடி ஏற்றுவதும் தொடர் நடவடிக்கையாகி விட்டன. குஜராத் மாநில பா.ஜ.க. ஆட்சி இந்த அத்துமீறல்கள் அனைத்துக்கும் உடந்தையாக செயல்படுகிறது.

குஜராத்தில் கிறித்துவர்கள் தாக்கப்படுவதைப் ...



படிப்பகம்

www.padippakam.com

கேட்ட போது "மதமாற்றம் பற்றி தேசிய விவாதம் தேவை" என்று மடைமாற்றிப் பேசி, இவ்வெறிச் செயல்களுக்கு நியாயம் கற்பித்தார் வாஜ்பாய்.

அண்மையில் குஜராத் மாநிலம் சூரத் மாவட்டம் சிண்டியாவில் இதுபோல் தேவாலயம் தாக்கப்பட்டதைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்த தமிழகத்துப் பாதிரியார் எஸ்றா சற்குணம் பஜ்ரங்தளக் குண்டர்களால் தாக்கப்பட்டார். தேவாலயத்தினுள் அத்து மீறி வைக்கப்பட்ட இராமர், சீதை படங்களை அங்கிருந்து அப்புறப்படுத்த முயன்ற போது காவல்துறை அதிகாரிகள் அவரது காலைப்பற்றி தரதரவென்று இழுத்து வெளியில் வீசினர். எஸ்றா சற்குணம் தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலைக் கண்டிக்க வேண்டிய தமிழக முதல்வர் கருணாநிதி அதற்கு மாறாக எஸ்றா சற்குணத்தைத் தமிழ் நாட்டிற்கு திரும்பி அழைத்தார்.

தமிழ்நாட்டில் நாகர்கோவிலில் கிறித்துவ வழிபாட்டிடங்கள் இந்து முன்னணி வெறியர்களால் கொளுத்தப்படுவது தொடர்ச்சியாக நடக்கிறது. பா.ஜ.க. கூட்டணி கட்சி என்பதால் தி.மு.க. அரசு இப்பிரச்சினைகளில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

அயோத்திப் பிரச்சினையைக் கிளப்ப மாட்டோம் என வாஜ்பாய் உறுதி கூறினாலும் நடைமுறை இதற்கு நேர்மாறாக இருந்தது. ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் 1992, டிசம்பர் 6ல் பாபர் மசூதியை இடித்து அந்த இடத்தில் அமைத்த தற்காலிக இராமர் கோயிலை நிரந்தரமாகக் கட்டி விரிவுபடுத்த தொடர் நடவடிக்கை மேற்கொண்டுதான் வருகின்றன. அயோத்திக்கு அருகில் கார்சேவபுரம் என்ற இடத்திலும், இராஜஸ்தானில் பின்ட்வாராவிலும் இதற்காக தூண்கள், மேற்கூரைகள் ஆகியவை பகுதி பகுதியாக உருவாக்கப்பட்டு வருகின்றன. இவற்றைக் கொண்டு வந்து ஒன்றையொன்று இணைத்து கோயில் கட்டடப் பணியை நிறைவேற்றுவது இவர்களது திட்டம்.

இராமர் கோயிலுக்கான இந்த ஆயத்தப் பணிகள் நடப்பதைப் படம் எடுத்து பத்திரிகைகள் வெளிப்படுத்திய பின்பும், அவ்வாறு எதுவுமே நடக்கவில்லை என்று மீண்டும் மீண்டும் பொய் கூறி வந்தார் வாஜ்பாய். ஆனால் விசுவ இந்து பரிசத் தலைவர்களோ பாபர் மசூதியை இடித்த இடத்தில் மாபெரும் இராமர் ஆலயம் எழுப்பப்படும் என்பதைத் தொடர்ந்து கூறிவந்தனர். 2001ல் 'இப்பணியை' முடிப்பது அவர்களது திட்டம்.

இந்த நிலையில்தான் கடந்த டிசம்பர் 6ஆம் நாள், இஸ்லாமியர்கள் பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாளை துக்க நாளாக கடை பிடித்துக் கொண்டிருக்கும் போது,"பாபர் மசூதியை இடித்தது தேசிய உணர்ச்சியின்வெளிப்பாடு" என்றும் "இந்துக்கள் அனுமதிக்கும் வேறொரு இடத்தில் பாபர் மசூதியைக் கட்டிக் கொள்ளலாம்" என்றும் தடித்தனமாகப் பேசினார் பிரதமர் வாஜ்பாய்.

இது நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஆனால் தி.மு.க. தலைவர் கருணாநிதியோ தயங்கித் தயங்கியே தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். ம.தி.மு.க. தலைவர் வைகோ. பிரதமர் வாஜ்பாயின் மீது நம்பிக்கை வைத்து "திருப்தி" தெரிவித்தார். எல்லாவற்றிலும் எகிறிக் குதிக்கும் ஜெயலலிதா பிரதமரின் இந்தப் பேச்சு "தேவையற்றது" என்று இதோபதேசம் செய்தார்.

நாடாளுமன்றத்தில் இதுபற்றிய விவாதம் வந்தபோதும் வாஜ்பாய் மீண்டும் இதையே வலியுறுத்திப் பேசினார். அது மட்டுமின்றி "பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்டிக் கொள்வதற்கு முஸ்லீம்கள் யாரும் மறுப்பு தெரிவிக்க வில்லை". என்று நெஞ்சார ஒரு இமாலயப் பொய்யை உதிர்த்தார். திரிணமுல் காங்கிரசும், தெலுங்கு தேசமும் வலியுறுத்திக் கேட்ட பிறகு "இந்தப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை நிறைவேற்றுவோம்" என்று 'உறுதி' கூறினார்.

முன்னதாக மம்தா பானர்ஜியின் வலியுறுத்தலால் தேசிய ஜனநாயக் கூட்டணியின் உயர்மட்டக் குழு கூடியபோதும் "தற்போது உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்பை நிறைவேற்றுவோம்" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உண்மையில் பாபர் மசூதி இருக்கும் இடம் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பான வழக்கு ஏதும் உச்சநீதிமன்றத்தில் இல்லை. அந்த வழக்கு அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் லக்னோ பிரிவின் விசாரணையில் உள்ளது. உச்ச நீதிமன்றத்தில் உள்ளது இது குறித்த பொது நல வழக்கு. 1992 டிசம்பர் 6 ஆம் நாள் பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் பரிவாரங்களைச் சேர்ந்தவர்கள் பாபர் மசூதியை இடித்து விடாமல் பாதுகாக்க உத்திரப் பிரதேச அரசுக்கு ஆணையிடுமாறு உச்சநீதிமன்றத்தை கோரி அந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. பாபர் மசூதியை இடிக்க விடமாட்டோம் என்று உ.பி. அரசும் உச்ச நீதிமன்றத்தில் உறுதி அளித்தது. ஆனால் அந்த உறுதி மொழி மீறப்பட்டது. மசூதி இடிக்கப்பட்டு விட்டது. ஆயினும் வழக்கு மட்டும் நீடிக்கிறது.

இந்த வழக்கு நீடிக்கும் போதே, இதனை செயலாற்றதாக்கும் வகையில் பல குழப்பங்கள் நடந்து விட்டன.



படிப்பகம்

www.padippakam.com

இவை பற்றியெல்லாம் கவலைப்படாமல் "உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்பை நிறைவேற்றுவோம்" என்று தீர்மானம் போடுவது ஊரை ஏய்க்கிற வேலை.

இதனைப் புரிந்து கொள்ள "பாபர் மசூதி/இராமஜென்மபூமி" சிக்கலைப் பரிசீலிப்பது அவசியம்.

ஆர்.எஸ்.எஸ். வாதம் என்ன?

'இராமர் அவதரித்த இடம் அயோத்தி. அயோத்தியில் இராமர் பிறந்த இடத்தில் இராமர் ஆலயம் நீண்ட காலமாக இருந்து வந்தது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் குப்தப் பேரரசர் விக்கிரமாதித்தனால் இக்கோயில் சீர்திருத்தப்பட்டது. 1528 ஆம் ஆண்டு முகலாயப் பேரரசர் பாபரின் ஆளுநர் மீர் பாக்குய் என்பவர் இந்த இராமர் கோயிலை இடித்துவிட்டு அவ்விடத்தில் மசூதியைக் கட்டினார். இராமர் பிறந்த இடத்தை இன்று மீட்கப் போகிறோம்' என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். - விஸ்வ இந்து பரிசத் தரப்பு வாதம்.

"குஜராத்தில் கஜினிமுகமதுவால் இடிக்கப்பட்ட சோமநாதர் கோயிலை சுதந்திரம் அடைந்தபின் வல்லபாய் படேல் முயற்சி செய்து மீண்டும் கட்டினார். அதே போல் பாபர் ஆட்சியில் இடிக்கப்பட்ட இராமர் கோயிலைக் கட்ட நான் கடமை ஆற்றுகிறேன்" என்று அத்வானி கூறினார்.

ஆர்.எஸ்.எஸ். சொல்வது போல் பாபர் மசூதி இருந்த இடத்தில் ஏற்கெனவே இராமர் கோயில் இருந்து, அது பாபர் ஆட்சியில் இடிக்கப்பட்டதா என்பதைப் பார்ப்போம்.

புகழ் பெற்ற வரலாற்றுத்துறை பேராசிரியர் ஆர்.எஸ். சர்மா இந்தப் பிரச்சினை பற்றிக் கூறுவது கவனிக்கத் தக்கது.

"முழுக்க முழுக்க இராமருக்காகக் கட்டப்பட்ட மூன்று கோயில்கள் 12 ஆம் நூற்றாண்டில் மத்தியப் பிரதேசத்தில் இருந்திருக்கின்றன.

ஆனால் உ.பி.யில் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 17 ஆம் நூற்றாண்டிலும் தான் இராமர் கோயில்கள் கட்டப்பட்டன. உ.பி.யில் முதல் இராமர் கோயில் என்று குறிப்பிடப்படும் கனகபவனம் அல்லது கனகமண்டபம் எனப்படும் கோயில் கட்டப்பட்டது 17 ஆம் நூற்றாண்டில்தான்." (R.S. Sharma - Communal History and Rama's Ayodhya)

இன்னொரு முக்கியமான ஆதாரத்தையும் ஆர்.எஸ். சர்மா முன் வைக்கிறார். அவத்தி மொழியில் இராமாயணத்தை "இராமசரிதமானஸ்" என்ற பெயரில் துளசிதாசர் எழுதினார். அவத்தி மொழியில் இவர் எழுதியதைத் தான் இந்தி இராமாயணம் என்கின்றனர். இவர் அயோத்தியில் இருந்து கொண்டு தான் இக்காவியத்தை எழுதி முடித்தார். 1528ல் துளசிதாசருக்கு 30 வயது. பாபரின் ஆளுநர் 1528ல் அங்கிருந்த இராமர் கோயிலை இடித்துத் தள்ளினார் என்பது உண்மையானால், இராம பக்தரான துளசிதாசர் மனம் துடித்து அதைக் குறிப்பிட்டிருக்க வேண்டுமல்லவா? துளசிதாசரின் இராமசரிதமானஸில் அயோத்தியில் இராமர் கோயில் இருந்ததாகவோ அது பாபரால் இடிக்கப்பட்டதாகவோ ஒரு குறிப்பும் இல்லை என்பதை ஆர்.எஸ்.சாமா எடுத்துக் கூறுகிறார்.

உண்மையில் இந்தி பேசும் பகுதிகளில் துளசிதாசரின் இராமசரிதமானஸ் பிரபலமான பிறகுதான், அதாவது 17 ஆம் நூற்றாண்டில்தான் இராமர் வழிபாடு அம் மக்கள் மத்தியில் பிரபலமாகி உள்ளது. அதன் பிறகே இராமர் கோயில் கட்டுவதும் நிகழ்ந்துள்ளது.

## வெண்மணி நாள் கொடியேற்று விழா நிகழ்ச்சிகள்

**தஞ்சை**

25.12.2000 அன்று தஞ்சை நகரத்தில் புதிய பேருந்து நிலையம், கருணாநிதி நகர், தங்கம் நகர், வடக்குவாசல், லாயம் பகுதிகளில் வெண்மணி நாள் கொடியேற்று விழா நடைபெற்றது.

தோழர்கள் க.பழநிமாணிக்கம், பழ.இராசேந்திரன் (நகரச் செயலாளர், த.தே.பொ.க.) இராசு.முனியாண்டி ஆகியோர் த.தே.பொ.க., த.இ.மு. கொடிகளை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினர்.

**மயிலம்**

டிசம்பர் 25ம் நாள் வெண்மணி தியாகிகள் நாள் கொடியேற்று விழா மயிலத்தில் சிறப்பாக நடைபெற்றது.

த.தே.பொ.க. மயிலம் கிளை கொ[illegible] த.தே.பொ.க. திண்டிவனம் நகர செயலாளர், ஆ[illegible] மு. கந்தசாமி அவர்களும், தமிழக இளைஞர் மு[illegible] கொடியினை த.இ.மு. தலைவர் ம.பாபு அ[illegible] ஏற்றி வைத்து தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். பேரா. பா.கல்யாணி, இரா.மணி, த. சக்திவேல் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திண்டிவனம்**

திண்டிவனத்தில் நகரசெயலாளர் மு. கந்தசாமி தலைமை ஏற்க தோழர் ம. பாபு த.தே.பொ.க. கொடியேற்றி வைக்க வெண்மணி தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. திரளான தோழர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்



படிப்பகம்

www.padippakam.com

இன்னொரு ஆய்வாளர் முனைவர் சியாம் நாராயணபாண்டே என்பவர் உத்திரப்பிரதேசத்தில் உள்ள அயோத்தி, இராமர் பிறந்த அயோத்தி அல்ல என்று கூறியுள்ளார். பெங்களூரில் நடைபெற்ற வரலாற்றுத் துறை மாநாட்டில் "வரலாற்று இராமரிலிருந்து கடவுள் இராமர் உருவான வரலாறு" என்ற தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையை பாண்டே வாசித்தார்.

"தற்போது ஆப்கானிஸ்தானில் உள்ள ஹெராத் நகருக்கு அருகே வரலாற்று இராமரின் அயோத்தி இருந்தது. தற்போது கூறப்படும் அயோத்தியின் வயதைவிட அதிக வயதைக் கொண்டது வரலாற்று இராமரின் அயோத்தி. வரலாற்று இராமரின் அயோத்தி ஆப்கானிஸ்தானிலுள்ள ஹரிருத் (சரயு அல்லது ஹரயு) என்ற நதிக்கரையில் அமைந்திருந்தது. இந்த நதி தற்போதைய ஹெராத் நகருக்கு வெளியே செல்கிறது" என்று ஆய்வாளர் பாண்டே குறிப்பிடுகிறார். ரிக்வேதம், அவஸ்தா ஆகியவற்றின் தகவல்கள் அடிப்படையிலும், பல வரலாற்று நூல்களின் சான்றுகளைக் கொண்டும் தன்து இக்கருத்தை பாண்டே முன் வைத்துள்ளார். (காண்க: தினமணி 19.11.97)

வால்மீகி இராமாயணத்தில் சரயு நதி வர்ணிக்கப்படுவது கவனிக்கத் தக்கது.

இவ்வாறு அகழ்வாராய்ச்சி அடிப்படையிலோ, வரலாற்றுக் குறிப்புகளின் அடிப்படையிலோ, பார்க்கும்போது பாபர் மசூதி இருந்த இடம் இராம ஜென்ம பூமி என்று ஆர்.எஸ்.எஸ். கூறுவது முற்றிலும் பொய்யானது என்பது தெளிவாகும்.

அயோத்தியில் பாபர் மசூதியும், அதற்கு அடுத்து மசூதியின் கிழக்குப் பகுதியில் இராமர் கோயிலும் ஒரே வளாகத்தில் இரண்டும் அமைந்திருந்தன.

'1949 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் தேதி விடியற்காலையில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது! பிறப்பு இடத்தில் (ஜென்மஸ்தான்) ஸ்ரீ இராமர் சீதா தேவி சிலைகள் திடீரென்று தானாகவே தோன்றின. ஆயிரக்கணக்கான மக்கள் அதனைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினர்' என்று ஆர்.எஸ்.எஸ். கூறி வருகிறது.

உண்மையில் தாம் செய்த அயோக்கியத்தனத்தை அற்புதம் நிகழ்ந்ததாகக் கூறி மறைக்கிறது ஆர்.எஸ்.எஸ்.

1949ஆம் ஆண்டு டிசம்பர் 14-ம் தேதியிலிருந்து 9 நாட்களுக்கு தொடர்ந்து இடைவிடாத இராமநாப பஜனை பாபர் மசூதிக்கு வெளியே இராமர் கோயில் முன்னால் நடந்து வந்தது. இதனை 'அகில பாரதிய இராமாயண மஹாசபை' என்ற அமைப்பு ஏற்பாடு செய்து நடத்தியிருக்கிறது.

இந்த பஜனையின் உச்சகட்டமாகத்தான் ஒரு அத்து மீறல் நடந்துள்ளது. 1949, டிசம்பர் 22 ஆம் தேதி இரவு என்ன நடந்தது என்பதை அயோத்தி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் ராம்துபே என்பவர் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை (FIR) கூறுகிறது. இது 1949, டிசம்பர் 23 ஆம் தேதி காலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் நாள் (22 ஆம் தேதி) இரவு பணியில் இருந்த காவலர் மாதா பிரசாத் என்பவர் தந்த அறிக்கை அடிப்படையில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. இது வருமாறு:

மாதா பிரசாத் கூறுவதாவது: இன்று காலை 8 மணி அளவில் ஜென்மபூமியை அடைந்தேன் 50 - 60 நபர்கள் பாபர் மசூதியின் சுற்றுச் சுவர் கதவின் பூட்டை உடைத்துக் கொண்டோ அல்லது படிகளைப் பயன்படுத்தி சுவர் மீது ஏறிக்குதித்தோ உள்ளே நுழைந்து, மசூதிக்குள் பகவான் இராமரின் சிலையை நிறுவினர். சீதை மற்றும் சில படங்களை உள் சுவரிலும், வெளிச்சுவரிலும் சிவப்பு வண்ணத்தில் வரைந்தனர் என அறிந்தேன். அப்போது பணியில் இருந்த ஹன்ஸ்ராஜ் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் அவர்கள் நிறுத்தவில்லை. செய்தி கிடைத்து மாகாண ஆயுதக் காவலர்கள் (PAC) வருவதற்குள்ளேயே, ஏற்கெனவே அந்த நபர்கள் மசூதிக்குள் நுழைந்துவிட்டிருந்தனர். மாவட்ட அதிகாரிகள் இடத்திற்கு வந்து உரிய ஏற்பாடுகளைச் செய்தனர். இதனையடுத்து, ஐந்து அல்லது ஆறாயிரம் மக்கள் கூடிவிட்டனர். அவர்கள் பஜனை பாடிக் கொண்டும், மத முழக்கங்களை எழுப்பிக் கொண்டும் மசூதிக்குள் நுழைய முயன்றனர். ஆயினும் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால் விரும்பத்தகாத சம்பவங்கள் ஏதும் நிகழவில்லை. ராம்தாஸ், ராம்சக்திதாஸ் மற்றும் அடையாளம் தெரியாத ஐம்பது அறுபது நபர்கள் அத்து மீறி நுழைந்து மசூதியின் புனிதத்தைப் பாழ்படுத்தி விட்டனர். பணியில் உள்ள அரசு அலுவலர்களும் மற்றும் பலரும் இதற்குச் சாட்சி இவ்வாறு எழுதப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது (காண்க A.G. Noorani E.P. W. 4.11.1989)

மசூதிக்குள் அத்துமீறி நிறுவப்பட்ட இராமர் சிலை பின்னர் நிரந்தரமாக்கப்பட்டது.

1986 ஜனவரியில் விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர், பூட்டை அகற்றி மசூதிக்குள் சென்று இராமர் வழிபாடு நடத்த உரிமை கோரி வழக்குத் தொடுத்தார். அது நிராகரிக்கப்பட்டது.

அதன் மீது 1986 ஜனவரி 31ல் மாவட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த நேரத்தில் விஸ்வ இந்து பரிசத் தலைவர்களுக்கும், அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இரகசிய பேரம் நடந்து முடிந்து விட்டது.

ஃபைஜாபாத் மாவட்ட நீதிமன்ற நீதிபதி கே.எம்.பாண்டே ஒரே நாளில் விசாரணையை முடித்து அடுத்த



படிப்பகம்

www.padippakam.com

நாளே - பிப்ரவரி 1ஆம் தேதியே தீர்ப்பு வழங்கினார். மசூதியின் பூட்டு நீக்கப்பட்டு, இந்துக்கள் உள்ளே சென்று வழிபட அனுமதி வழங்கப்பட்டது.

“1950 ஆம் ஆண்டிலிருந்தே கடந்த 35 ஆண்டுகளாக மசூதிக்கு உள்ளே இராமர் சிலை இருந்த பூட்டிய கதவுக்கு வெளியிலிருந்து வழிபாடுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த பூட்டை அகற்றுவதால் வானம் ஒன்றும் இடிந்து விழாது” என்று அந்த நீதிபதி தனது ‘முடிவுக்கான காரணத்தை விளக்கினார்.

ராஜீவ் காந்தியின் ஆணையின் பேரில் இவ்வாறான தீர்ப்பு மிக அவசர அவசரமாக வழங்கப்பட்டது என்று சந்தேதிக்க இடமிருக்கிறது.




அதன் பிறகு இந்தியா முழுவதுமிருந்து ‘இராமஜோதி’ யாத்திரை நடத்தியும் ரதயாத்திரை நடத்தியும் வெறியூட்டி கலவரங்களை ஏற்படுத்தி திரட்டப்பட்ட கரசேவகர்களைக் கொண்டு 1992 டிசம்பர் 6 ஆம் நாள் பாபர் மசூதியை ஆர்.எஸ்.எஸ். கும்பல் இடித்துத் தள்ளியது. குஜராத் சோமநாதர் கோயிலிலிருந்து ரதயாத்திரை நடத்தி போகுமிடமெல்லாம் பாபர் மசூதியை இடிப்போம் என்று வெளிப்படையாக பேசியவர் அத்வானி. பாபர் மசூதி இடிக்கப்படும்போது பல மணி நேரம் இடைவிடாமல் வெறிக் கூச்சல் போட்டு குண்டர்களை உற்சாகப்படுத்தியவர் உமாபாரதி. மசூதி இடிப்பை எப்படி நிறைவேற்றுவது என்பதற்கு அருகிலிருந்து வழிகாட்டியவர் முரளி மனோகர் ஜோசி. இதற்கெல்லாம் ஒளிநாடா ஆதாரங்கள் உள்ளன.

அன்றைக்கு இந்திய அரசின் தொலைக்காட்சி இந்த கோர நிகழ்வை இருட்டடிப்பு செய்தாலும், வெளிநாட்டுத் தொலைக்காட்சிகள் இதனை நேரடி ஒளிபரப்பு செய்தன.

உண்மை இவ்வாறு இருக்க “அத்வானி, முரளி மனோகர் ஜோசி, உமா பாரதி ஆகியோர் பாபர் மசூதி இடிப்பைத் தடுத்து நிறுத்தவே முயன்றனர்” என்று வாஜ்பாய் கூறுவது, அவர் பொய் கூற அஞ்சாதவர் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

பாபர் மசூதி இடிப்புக்காக தொடுக்கப்பட்ட குற்றவியல் வழக்கு ஒன்றில் இந்த மூவர் உள்ளிட்ட பலர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. ‘இந்த வழக்கு முடியும் வரை மூவரும் அமைச்சர் பதவியிலிருந்து விலகி இருக்க வேண்டும். அவர்கள் மறுத்தால் பிரதமர் அவர்களை விலக்கி வைக்க வேண்டும்’ என்று எதிர்க்கட்சிகள் கோருவது நியாயமானதே.

உள்துறை அமைச்சராக அத்வானி நீடிக்கும்போது அவர் கீழ் இயங்கும் உளவுத்துறை அவருக்கு எதிராக் உறுதியாக வழக்கை நடத்துவது கடினம் என்பது கவனங் கொள்ளத்தக்கது.

எனவே, இந்த மூன்று அமைச்சர்களையும் விலக்குவதே நியாயம்.

ஆனால் தேசிய ஜனநாயக் கூட்டணி இதுபற்றி மூச்சுவிடவில்லை. ஏனெனில் அத்வானியைப் பதவி விலகச் சொன்னால் அது பாஜக.வுக்கு மரண அடியாகப் போய் முடியும். அதனால் தமது பதவிகளும் பறிபோகும் என தி.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் அஞ்சுகின்றன.

பாபர் மசூதி இடிக்கப்பட்டு, அங்கு இராமர் சிலை வைக்கப்பட்ட பிறகு, விசுவ இந்து பரிசத் அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் ஒரு இடைக்கால மனுவைத் தாக்கல் செய்தது. இராமர் சிலை அங்கு இருப்பதால், அங்கு சென்று பக்தர்கள் வழிபட அனுமதி அளிக்க வேண்டும் என அம்மனுவில்



படிப்பகம்

www.padippakam.com

கோரப்பட்டிருந்தது. அதனை ஏற்ற உயர்நீதி மன்றம், பக்தர்கள் சென்று வழிபடலாம் என்று உத்தரவிட்டது. அதாவது, நடைமுறையில் அது இராமர் ஆலயமாக்கப்பட்டு விட்டது. இந்த வகையில் அலகாபாத் உயர்நீதி மன்றமானது, உச்ச நீதிமன்றத்தில் உள்ள பொது நல வழக்கையும் வழி மறித்துவிட்டது.

முடிந்தது முடிந்து விட்டது, இனி மசூதி கட்டித்தர கோரவேண்டாம் என இப்போது வாஜ்பாய் பஞ்சாயத்து பேசுகிறார். "இறந்தகாலம் - அது அண்மைக் காலமோ முந்தைய காலமோ - எப்படியிருப்பினும் இறந்தகாலம்தான். அதையெல்லாம் மாற்றியமைக்க முயல வேண்டாம். நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும்" என்கிறார் வாஜ்பாய் (வாஜ்பாய் கட்டுரை - The Hindu 2.1.2001) பொது நியாயம் போல பேசி நடந்த அக்கிரமத்தை மூடி மறைக்கும் முயற்சியே இது. பொதுவாக ஒரு அத்து மீறலை ஏற்றுக் கொண்டால், அடுத்தடுத்தும் அதுவே தொடர் கதையாகி விடும். ஆர்.எஸ்.எஸ். கும்பல் பாபர் மசூதியோடு நிற்கவில்லை. உ.பி.யின் மதுராவிலுள்ள மசூதியையும் இடிக்கப் போவதாக அறிவித்துள்ளது. காசியிலும் மசூதி இருக்கக் கூடாது என்று கூக்குரலிடுகிறது. ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பரிவாரத்தின் பார்ப்பனியப் பேரரசுக் கனவுக்கு அளவே இல்லை.

தங்களது பேரரசுக் கனவுக்கு ஏற்றாற்போல் வரலாற்றை மறைத்தும், திரித்தும், மதச்சாயம் பூசியும் விளக்கமளிப்பது ஆர்.எஸ்.எஸ். கும்பலின் வாடிக்கை. சில வரலாற்றறிஞர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றை இந்து - முஸ்லீம் மோதல் வரலாறாக வர்ணிப்பது இவர்களது நோக்கத்திற்கு ஒத்திசைவாக உள்ளது.

படையெடுப்பது அல்லது படையெடுக்கப்படுவது என்பதே வரலாறு நெடுகிலும் நிகழ்ச்சிப் போக்காக இருந்திருக்கிறது. படையெடுப்பின் போது வென்றவர்கள் தோற்ற நாட்டின் கோயிலைக் கொள்ளையடிப்பதும், கோயில் சிலைகளை அபகரிப்பதும், கோயில்களை இடிப்பதும் அடிக்கடி நடந்திருக்கிறது. இதில் 'இந்து' அரசர் முஸ்லீம் அரசர் என்ற வேறுபாடெல்லாம் இல்லை.

அரசனை இறைவனோடு இணைத்துக் காட்டுகிற பழக்கம் இருந்திருக்கிறது. கடவுளைக் குறிக்கிற 'இறை' என்ற சொல்லாலேயே அரசரையும் தமிழ் இலக்கியங்கள் அழைப்பதைப் பார்க்கலாம். அது போல் அரசர் வழிபட்ட கோயில் மற்ற கோயில்களை விட முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கிறது. பேரரசு காலத்தில் ஒரு மன்னரோ அல்லது அவரது பரம்பரையினரோ கட்டிய கோயில் அரசருக்கு இணையாகப் போற்றப்பட்டது. அரசுரிமையின் அடையாளமாகவே அந்தக் கோயிலும் பார்க்கப்பட்டது.

இவ்வாறான தெய்வங்களை "ராஷ்டிர தேவா" என்று வடமொழி இலக்கியங்களும், கல்வெட்டுகளும் குறிக்கின்றன.

இதன் மூலம் கடவுள் மீதுள்ள பக்தியும், அரசர் மீதான பற்றும் ஒன்றிணைக் கட்டுகின்றன. அரசரின் சொத்துகள் கோயிலின் பெயராலேயே நிர்வகிக்கப்பட்டதும் கோயில்கள் அரசரின் அணி, மணிகளைக் குவித்து வைத்துப் பாதுகாக்கும் இடங்களாக இருந்ததும் அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

அரசச் சின்னங்களில் ஒன்றாக கோயிலின் தலைமைத் தெய்வச் சிலை இருந்ததால் படையெடுப்பில் வென்ற மன்னர், தோற்ற அரசரின் கோயில் சிலையைக் கைப்பற்றி எடுத்துச் செல்வது அல்லது உடைத்து எறிவது என்பது வாடிக்கையாக நிகழ்ந்துள்ளது. படையெடுப்பின்போது கோயில்கள் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன.

சோழப் பேரரசர் முதலாம் இராசேந்திரன் சாளுக்கியர்கள் மீது படையெடுத்தபோது அங்கிருந்து துர்க்கை, விநாயகர் சிலைகளையும், கலிங்கப் படையெடுப்பின்போது பைரவர், காளி சிலைகளையும், வங்காள அரசன் மகிபாலனை வென்று சிவன் சிலையையும் கவர்ந்து வந்தது கவனிக்கத் தக்கது.

இப்படையெடுப்புகளில் கோயில்களிலிருந்து ஏராளமான செல்வங்களும் கொள்ளையிடப்பட்டன.

பாண்டியப் பேரரசன் மாறவர்மன் இலங்கை மீது படையெடுத்து அங்கிருந்த தங்க புத்தர் சிலையைக் கைப்பற்றி வந்து தனது நகைக் கூடத்தை அலங்கரித்ததும், பல்லவ அரசன் நரசிம்மவர்மன் வாதாபி மீது படையெடுத்து விநாயகர் சிலையை எடுத்து வந்ததும், ஹர்ஷவர்த்தனன் எதிரி நாட்டு கோயில்களில் கொள்ளையடிப்பதற்கு தனிப்படையே அமைத்திருந்ததும் வரலாறு.

ராஷ்டிர கூட அரசன் மூன்றாம் இந்திரன் பிரதிகரமன்னர் மீது படையெடுத்தபோது யமுனை நதிக்கரையில் அமைந்திருந்த காலப்ரியா ஆலயத்தை இடித்து தரைமட்டமாக்கியதும், கலிங்க மன்னன் கபிலேந்திரன் தமிழகத்தின் மீது படையெடுத்து சிவ ஆலயங்களையும், திருமால் கோயில்களையும் இடித்துத் தள்ளியதும், வங்காளப் படை காஷ்மீரை ஆண்ட லலிதாதித்தனை வென்று, அவன் வழிபட்ட வைகுந்தவாசன் என்ற விஷ்ணு சிலையை நொறுக்கியதும் வரலாறு காட்டும் உண்மைகள்.

வரலாறு இப்படியிருக்க குஜராத்தில் உள்ள சோமநாதர் ஆலயத்தை கஜினி முகமது கொள்ளையடித்தான் என்பதையும், பீஜப்பூர் சுல்தானின் படைத்தளபதி அஃப்சல்கான் மராத்திய மன்னன் சிவாஜி கும்பிட்ட பவானி ஆலயத்தை இடித்ததையும், இன்னும் இதுபோன்ற இஸ்லாமிய எடுத்துக்காட்டுக்களையும் மட்டும் கூறி வரலாற்றை வகுப்புவாதக் கண்ணோட்டத்தில் முன்வைப்பது ஆர்.எஸ்.எஸ். கும்பலின் சூதான முயற்சியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

அதே போல் கடந்த கால வரலாற்றில் மதத்தின் பெயரால் மோதல்களும், படுகொலைகளும் நிகழ்ந்தே இருக்கின்றன. சைவ - வைணவத் தகராறுகள் நடந்திருக்கின்றன. ஒரு சமயக் கோயில் இன்னொரு சமயக் கோயிலாக மாற்றப்பட்டிருக்கின்றன. சமணர்கள் சைவர்களால் கழுவிலேற்றிக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நாளந்தா பல்கலைக் கழகம் பிராமண மதத்தினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருக்கிறது.

இப்படி எப்போதோ வரலாற்றில் நிகழ்ந்துவிட்டவற்றையெல்லாம் இப்போது மாற்றிமைக்கப் புறப்பட்டால் சமூகத்தில் அமைதி நிலவ முடியுமா? ஏற்கெனவே நடந்தவற்றுக்கெல்லாம் பழி வாங்குவது என்று வந்துவிட்டால் ரத்தக் களறிதான் மிஞ்சும்.

உண்மையில் பாபர் மசூதியைப் பொருத்தமட்டும் ஆர்.எஸ்.எஸ். கூறுவது நிரூபிக்க முடியாத முழுக்க முழுக்கக் கட்டுக்கதை என்பதை ஏற்கெனவே பார்த்தோம். அதனால்தான் "இராமர் பற்றியும், இராமர் பிறப்பு, இராமர் பிறப்பிடம் பற்றியும், உள்ள எங்களது நம்பிக்கை நீதிமன்ற கேள்விகளுக்கு அப்பாற்பட்டது" என்று அத்வானி கூறினார். பிரச்சினை இராமர் பிறப்பு குறித்த நம்பிக்கை பற்றியது அல்ல. மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் இருந்ததா என்பதுதான் பிரச்சினை. அப்பாவி மக்களைத் திரட்டிக் கொள்ளுவதற்காக ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் முன்வைக்கும் திசை திருப்பும் வாதமே இது.

எப்போதோ இந்துக்களுக்கு நேர்ந்த அவமானத்தைத் துடைக்கப் போகிறோம் என்று கூறும் ஆர்எஸ்எஸ் - பாஜக. பரிவாரங்கள், எப்போதோ தொடங்கி, இன்றுவரை நீடித்துக் கொண்டிருக்கிற இந்துமத சாதி இழிவைப் போக்க முனைந்ததுண்டா? இதற்கெல்லாம் ஆர்.எஸ்.எஸ். முன்வராது. ஏனெனில் சாதி நீடிப்பதால் அதிகப் பலன் அடைபவர்கள் பார்ப்பனக் கூட்டத்தினரே. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இதயமாகவும், மூளையாகவும் இருப்பவர்கள் இந்தப் பார்ப்பனர்கள் தாம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இந்து - கிறித்துவர் என்ற மோதலை உருவாக்குவதிலேயே ஆர்.எஸ்.எஸ். முனைப்பாக இருக்கிறதே தவிர, தீண்டாமைக்கெதிராக எந்த உருப்படியான போராட்டமும் நடத்தியதில்லை.

மண்டல் குழு பரிந்துரைப்படி வி.பி.சிங் ஆட்சி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27% இட ஒதுக்கீடு வழங்கியதையடுத்து, தாழ்த்தப்பட்டவர்கள் பழங்குடியினர் ஒதுக்கீட்டையும் சேர்ந்து மொத்த ஒதுக்கீடு 49% ஆனது.

அப்போது "அரசு வேலைகளில் பாதிப்பேர் தகுதியற்றவர்களாக இருப்பார்கள். இடஒதுக்கீடு என்ற பெயரால் பெருந்திரளாக நச்சுக் கிருமிகளை உள்ளே விடுவதாக இது அமையும். கட்டமைப்பு முழுவதையும் தகுதியற்றதாக்கி விடும்" என்று எழுதினார் அருண்ஷோரி சூத்திரன், பஞ்சமன் என்று இழிவுபடுத்தப்பட்டுள்ள இந்த நாட்டுப் பெரும்பான்மை உழைப்பாளி மக்களை நச்சுக் கிருமிகள் என்று ஏளனம் செய்த அருண்ஷோரி இன்று வாஜ்பாய் அமைச்சரவையில் ஒரு அமைச்சர்.

மண்டல் குழு பரிந்துரைக்கு எதிராக தில்லியிலும், ஐதராபாத்திலும், லக்னோவிலும் ஆர்.எஸ்.எஸ்காரர்கள் கலவரம் செய்தது நினைவு கூரத் தக்கது.

இந்நிலையில் மண்டல் குழுவிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பி, இந்து என்ற போர்வையில் தமது செல்வாக்கு மண்டலத்திற்குள் இழுத்துக் கொள்ள செய்யும் முயற்சியாகவே அத்வானியின் ரதயாத்திரை நடத்தப்பட்டது. இந்த ரதயாத்திரை பல உயிர்களை பலி கொண்டு ரத்த யாத்திரையாக மாறியதால் வி.பி.சிங்கின் ஆணைப்படி அத்வானி கைது செய்யப்பட்டார். இதையே சாக்காக வைத்து பா.ஜ.க. தனது ஆதரவைத் திரும்பப் பெற்று வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்தது.

மண்டல் குழு பரிந்துரையை அமலாக்க ஆணை பிறப்பித்தவுடனேயே பாபர் மசூதிப் பிரச்சினை தீவிரப்படுத்தப்பட்டதையும், மண்டல் குழு ஆணை பிறப்பித்த இரண்டு மாதத்திலேயே வி.பி.சிங் ஆட்சி கவிழ்க்கப்பட்டதையும் கவனத்தில் கொண்டால் பா.ஜ.க. வின் உண்மை முகம் தெரியும்.

"இந்துவே ஒன்றுபடு" என்று பா.ஜ.க. வகையறாக்கள் முழக்கமிடுவதன் உண்மையான நோக்கம், பார்ப்பனிய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு, வர்ண - சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக முணுமுணுப்பு கூட செய்யாமல் 'இந்துவாய்' ஒன்றுபட வேண்டும் என்பதே ஆகும்.

இந்துக்களே ஒன்றுபடுங்கள் என்று கூக்குரலிடும் இந்த அமைப்புகள் காஞ்சி சங்கரமடத்திற்கு பீடாதிபதியாக ஒரு தாழ்த்தப்பட்ட இந்துவையோ, ஒரு பிற்படுத்தப்பட்ட இந்துவையோ நியமிக்கும்படி கோருவார்களா? இல்லையே.

'தகுதி, தகுதி' என்று கூச்சலிடும் இந்த அமைப்புகள் கோயில் அர்ச்சகர் வேலைக்கு பிறப்பை மட்டும் தகுதியாக வலியுறுத்தும் உள்நோக்கம் என்ன? இவற்றுக்கெல்லாம் காரணம் இந்து மக்களின் ஆன்மீகத் தலைமை பார்ப்பனர் கைகளை விட்டுப் போய் விடக் கூடாது என்ற உள்நோக்கம் தானே.

எனவே, பா.ஜ.க.வின் 'இந்துத்துவா' என்பது ஒட்டு மொத்த இந்துக்களின் உயர்வுக்கான கொள்கையில்லை



படிப்பகம்

www.padippakam.com

என்பது தெளிவாகும். பார்ப்பனிய மேலாண்மையை வலியுறுத்தும் அரசியல் சொல்லாடலே 'இந்துத்துவா' என்பதாகும்.

இஸ்லாமியர்களை எதிரிகளாகக் காட்டி, கலவரம் ஏற்படுத்தி அதனடிப்படையில் அனைத்து சாதியினரையும் இந்து என்ற அடையாளத்தின் கீழ் ஒருங்கிணைத்து அதன் மூலம் பார்ப்பனிய மேலாண்மையை உறுதி செய்வதே பா.ஜ.க.வின் திட்டம். பாபர் மசூதி பிரச்சினை, விநாயகர் ஊர்வலம் முதலானவற்றை இந்த நோக்கிலேயே பா.ஜ.க. இந்து முன்னணி வகையறாக்கள் அணுகுகின்றன.

வாஜ்பாய் பிரதமரான பிறகு இந்த அமைப்புகளின் வெறிச் செயல்கள் அதிகமாயின. இதிலே அத்வானிதான் தீவிர இந்துத்துவவாதி என்றும், வாஜ்பாய் மிதவாதி என்றும் வேடம் கட்டுவது மக்களைக் குழப்புவதற்கான சூதே ஆகும்.

தீவிர வகுப்புவாதத்தைத் தலைமுறை தலைமுறையாக விதைக்கும் வகையில் வாஜ்பாய் அரசு கல்வியைக் காவி மயமாக்கி வருகிறது.

ஆரியர்கள் இந்த மண்ணின் மைந்தர்களே என்றும், சிந்து வெளி நாகரிகம் பண்டைத் தமிழர்களின்-திராவிடர்களின் நாகரிகமல்ல; அது சரசுவதி நதிப் பள்ளத்தாக்கின் வேத நாகரிகம் என்றும் வரலாற்றைத் திரித்து எழுதி அதை இந்தியா முழுதும் பாடத் திட்டத்தில் சேர்க்க தீவிரமாக முயன்று வருகிறது (உ.பி. இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஏற்கெனவே இவை பாடப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டு விட்டன.)

இவ்வாறான கருத்தை நிலை நிறுத்தி விட்டால் பண்டைத் தமிழர்கள் அறிவியலில், கட்டடக் கலையில், பாசனப் பொறியியலில் உயர்ந்திருந்தார்கள் என்ற உண்மையை மறைத்து, 'ஆரியர்களே அறிவாளிகள்' என்று கூறி விடலாம் என்பதே வாஜ்பாயின் திட்டம். அதன் மூலம் தமிழ் அறிவியல் மொழி அல்ல, சமஸ்கிருதமே அறிவியலுக்கு ஏற்றது என்று சாதிப்பது எளிதாகிவிடும்.

"சமஸ்கிருதம் உலக மொழிகளின் தாய்" என இதுவரை கூறிவந்த ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க பரிவாரங்கள், இப்போது "சமஸ்கிருதமே கணிப்பொறிக் கல்விக்கு ஏற்ற ஒரே மொழி எனவே அனைவரும் சமஸ்கிருதத்தைக் கட்டாயம் படிக்க வேண்டும்" என்று கூறத் தொடங்கிவிட்டன. கடந்த நவம்பர் 14 ஆம் நாள் தில்லி அமைச்சர் முரளி மனோகர் ஜோசி வெளியிட்ட கல்வி ஆவணத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆவணம் மீண்டும் மும்மொழிக் கொள்கையை - இந்தித் திணிப்பை கொண்டு வருகிறது. மனித மதிப்பீடுகளை மீட்கும் கல்வி, என்பதன் பேரால் பார்ப்பன மேலாண்மையையும், மதநெறிகளைக் கற்பிப்பது என்ற பேரால் சிறுபான்மை மதங்களைப் புறக்கணிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

"தொடக்கக் கல்வி நிலையிலேயே அறிவுத்திறன் மேம்பட்டப் பிள்ளைகளைக் கண்டறிந்து அவர்கள் பால் தனிக் கவனம் செலுத்த வேண்டும்" என்று இந்த கல்வி ஆவணம் கூறுகிறது. சமூகத்தில் ஏற்கெனவே கல்வி வாய்ப்பு அதிகமாக பெற்றுள்ள பார்ப்பனர்கள் மற்றும் ஆதிக்க சாதி வீட்டுப் பிள்ளைகளே இதனால் அதிகப் பலன் பெறுவர். கல்வியில் உள்ள இட ஒதுக்கீட்டுப் பலனைப் பறிக்கிற புதிய முயற்சியாகும் இது. பள்ளிப் பிள்ளைகளுக்கு உள்ள ஆன்மீக உணர்வுக்கு தனி மதிப்பெண் கொடுக்க வேண்டும் என்று பா.ஜ.க. அரசின் கல்வி ஆவணம் கூறுகிறது. மூட நம்பிக்கைகளை வளர்ப்பதற்கே இதுபயன்படும்.

பெண்கள் பாரம்பரியமாக செய்து வந்தப் பணிகளில் அவர்களைச் சிறக்கச் செய்யும் வகையில் பாடத்திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்று இந்த ஆவணம் கூறுகிறது. வீட்டு வேலைகளுக்குள்ளும், சேவைப் பணிகளிலும் பெண்களை முடக்கிப் போடும் முயற்சியே இது.

ஜோசியம் பற்றியும், பார்ப்பன சடங்குகள் பற்றியும் கல்வி அளிக்க பல்கலைக் கழகங்களில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று வாஜ்பாய் அரசு அறிவித்துள்ளது.

தில்லி அரசு வெளியிட்டுள்ள புதிய கல்வி ஆவணத்தின் அடிப்படையில் கடந்த டிசம்பர் 26 அன்று காரைக்குடியில் பயிற்சி முகாம் ஒன்றை மனிதவள மேம்பாட்டுத் துறை நடத்தியிருக்கிறது. பெயரளவிற்கு கல்வியில் மாநில அரசுக்கு இருக்கிற அதிகாரம் கூட ஒன்றுமில்லாமல் ஆக்கப்படுகிறது என்பதே இதற்குப் பொருள்.

இதுபற்றியெல்லாம் தி.மு.க. அரசு கவலைப்படுவதாகவே தெரியவில்லை.

இந்தியத் தன்மை என்றாலே இந்துத்தன்மைதான் என்ற பா.ஜ.க.வின் பார்ப்பனிய வெறிக் கூச்சலுக்கு காங்கிரசோ பூர்வீகப் பொதுவுடைமைக் கட்சிகளோ உறுதியாக முகம் கொடுக்க முடியாது. ஏனெனில் இந்திய தேசியம் என்பதே இந்து தர்மத்தின் அடிப்படையில், அதாவது பார்ப்பனியத்தின் அடிப்படையில் கட்டியமைக்கப்பட்டிருப்பது தான்.

"இந்திய சமுதாயத்திற்குப் பொதுவான அம்சம் இந்துத்துவம் (இந்து சமயத்திற்கு அர்ப்பணிப்பு) என்பதாகும். நாம் இப்போது முஸ்லீம்களையும், கிறித்துவர்களையும் பற்றிப் பேசவில்லை. ஏனெனில் நமது சமுதாயத்தில் பெரும்பான்மையாக எல்லா இடங்களிலும் இருப்பவர்கள்




படிப்பகம்

www.padippakam.com

இந்துக்கள்தாம். பஞ்சாப், வங்காளம், மராத்தியம், தெலுங்கானா, திராவிடம் ஆகிய இடங்களில் உள்ள இந்துக்கள் எல்லாம் ஒன்றுதான். இதற்குக் காரணம் இந்து தர்மம்தான்" என்று திலகர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. (விரிவான ஆதாரங்களுக்கு காண்க: எஸ்.வி.இராஜதுரை எழுதிய இந்து - இந்தி - இந்தியா)

இந்து தர்மம் என்பதே பெரிதும் வர்ண - சாதிப் பிளவைச் சார்ந்திருக்கிறது. இந்து மதத்தின் தனித்தன்மையைத் தீர்மானிப்பதாக சாதிமுறை இருக்கிறது.

இந்து தர்மத்தின் தத்துவமே பார்ப்பனியம்தான். இந்திய தேசியம் என்பது இந்து தர்மத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்னும்போது இந்திய தேசியத்தின் தத்துவ அடிப்படை பார்ப்பனியமே என்பது தெளிவு. அதாவது இந்திய தேசியம் என்பது பார்ப்பனிய தேசியமே.




எனவே, இந்திய தேசியம் பேசுகிற ஒருவர் - அவர் யாராக இருந்தாலும் - தான் அறிந்தோ அறியாமலோ பார்ப்பனியத்தில் கால்பதித்து நிற்கிறார் என்பது கவனங் கொள்ளத் தக்கது. இந்திய தேசியம் என்பதே வகுப்புவாத முழக்கமாகும். மதசார்பற்ற இந்திய தேசியம் என்பதெல்லாம் வெறும் மாயை.

இதனால்தான் இந்திய தேசியம் பேசுகிற காங்கிரசோ, பூர்வீகப் பொதுவுடைமைக் கட்சிகளோ, பா.ஜ.க. வின் இந்துத்துவா வெறியை முரணின்றி எதிர்க்க முடியவில்லை.

பா.ஜ.க. அரசின் தாராளப் பொருளாதாரக் கொள்கையால் தாக்குண்ட அனைத்து பிரிவு மக்களும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த எதிர்ப்பலைகளைத் திசை திருப்ப வேண்டிய தேவையும் வாஜ்பாய்க்கு இருந்தது. பாபர் மசூதி இடிப்பு பற்றிய பிரச்சினையை நாடாளுமன்றத்தில் விவாதிக்க மறுத்து, சிக்கலைப் பெரிதாக்கி, அதன் பிறகு இந்த இடிப்பு தேசிய விழிப்புணர்ச்சியின் வெளிப்பாடு என்று பேசி அதிர்ச்சியை ஏற்படுத்தியதற்கு இந்த திசை திருப்பும் உள்நோக்கமும் ஒரு காரணமாக இருக்கலாம்.

வாஜ்பாய் அரசின் தாராள இறக்குமதியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள் விவசாயிகள் ஆவர். சர்க்கரை, தேயிலை, உணவு எண்ணெய், முந்திரி, பால்மாவு, பதப்படுத்தப்பட்ட இறைச்சி என அனைத்தும் தாராளமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. வேளாண் பொருட்களின் இறக்குமதி 1993 - 94ல் 1024 கோடி ரூபாயாக இருந்தது. 1998 - 99ல் 9600 கோடி ரூபாயாக - அதாவது சராசரியாக ஆண்டுக்கு சுமார் இரண்டு மடங்கு என்ற அளவில் உயர்ந்துள்ளது.

நாட்டின் சர்க்கரை உற்பத்தி மொத்தத் தேவையை விடவும் அதிகமாகி, சர்க்கரை தேங்கியுள்ள சூழ்நிலையில், வாஜ்பாய் அரசு வெளிநாடுகளிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்தது. எனவே, ஆலைகளில் உற்பத்தியான சர்க்கரையை விற்க முடியவில்லை. இதனால் ஆலைக்கு கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு பணமும் கிடைக்கவில்லை. கரும்புக்கு கட்டுப்படியான விலையும் வழங்கப்படவில்லை.

தமிழ்நாட்டு அரிசி வெளிநாட்டுக்கு அல்ல, அண்டை மாநிலங்களில் விற்பதற்குக் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. மாறாக, கர்நாடகாவிலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் அரிசி தமிழ்நாட்டுச் சந்தைக்குத் தாராளமாக வந்து குவிகிறது. இதன் விளைவாக அரிசி விலை அடக்கப்பட்டு, நெல்லுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல் விவசாயிகள் அல்லல் படுகிறார்கள். குறிப்பாக, 1009 போன்ற மோட்டாரக அரிசிக்கு கேரளாவில் அதிக கிராக்கி இருக்கும் போது அது இங்கே தேங்கிக் கிடப்பது மிகப் பெரிய அவலம்.

முந்திரி இறக்குமதி ஆனதால் அதன் கொள்முதல் விலை பாதியாக சரிந்தது. தேங்காய் கொப்பரை இறக்குமதி தென்னை விவசாயிகளை வெகுவாக பாதித்து அந்த விவசாயிகள் வீதியில் இறங்கி போராடி வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

தேயிலை ஏற்றுமதியாகி வந்தது போக, இப்போது தாராளமாக இறக்குமதியாவதால் வயிற்றலடிக்கப்பட்ட ஊட்டி தேயிலை விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்ட போது, குண்டாந்தடியும், துப்பாக்கிச் சூடுமே அவர்களுக்குப் பதிலாகக் கிடைத்தது.

உலக வர்த்தக அமைப்பின் நிபந்தனைக்கு இணங்க விவசாய மானியம் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டப்பட்டு வருகிறது. ஆனால், மானியத்தை வெட்டுமாறு இந்தியாவுக்கு நிபந்தனை போடும் முற்றாதிக்க நாடுகள் தமது நாட்டில் விவசாயத்திற்கு மிக அதிகமாக மானியம் அளிக்கின்றன.

அமெரிக்கா ஒரு ஏக்கருக்கு ஒரு போகத்திற்கு 6,000 ரூபாய் நேரடியாக மானியம் வழங்குகிறது. இது தவிர 'பச்சைப் பெட்டி' என்ற பெயரில் விவசாய முதலீட்டு மானியம் 'நீலப் பெட்டி' என்ற பெயரில் சந்தைத் தேவைக்கு ஏற்றாற்போல் விவசாய உற்பத்தியைக் குறைத்து, குறையும் அளவுக்கு ஏற்ப தொடர்புடைய விவசாயிகளுக்கு நட்ட ஈடு என்று பலவித உதவிகளைச் செய்கிறது. இது தவிர டீசலும், உரமும் அந்த நாட்டில் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. இதனால் அமெரிக்க கோதுமையும், அரிசியும் இங்குள்ள உற்பத்தி விலையை விட குறைவாக விற்கப்படுகிறது.

தாராள இறக்குமதியை இங்கே வலியுறுத்தும் வளர்ந்த நாடுகள் தங்கள் நாடுகளில் தாராள உணவு இறக்குமதியை அனுமதிப்பதில்லை. எடுத்துக் காட்டாக ஜப்பான் தங்கள் நாட்டில் இறக்குமதியாகும் விவசாய விளை பொருட்களுக்கு கற்பனையே செய்ய முடியாதபடி 2000% இறக்குமதி வரி விதித்து தமது உள்நாட்டுச் சந்தையைப் பாதுகாத்துக் கொள்கிறது.

உலக நிலைமை இவ்வாறிருக்க, இந்தியாவில் தாராள இறக்குமதியை வாஜ்பாய் அரசு அனுமதிப்பதற்கு வர்த்தக ஒப்பந்தம் மட்டும் காரணமில்லை. இறக்குமதி மொத்த வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள மார்வாடி சேட்டுகளும், பன்னாட்டு முதலாளிகளும் பா.ஜ.க. தலைவர்களுக்கு கொடுக்கும் லஞ்சமும் ஒரு காரணம்.

தாராள இறக்குமதியால் சிறு, நடுத்தரத் தொழில்கள் முடங்கிக் கிடக்கின்றன. இந்தியா முழுவதும் 2.24 இலட்சம் தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. தமிழ்நாட்டில் அம்பத்தூர், கிண்டி, திருச்சி, ஒசூர், இராணிப்பேட்டை, கோவை போன்ற பல தொழில் நகரங்களில் ஏராளமான சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

WTO ஒப்பந்தப்படி வரும் ஏப்ரல் முதல் தடையற்ற வர்த்தகம் அமலுக்கு வருகிறது. அப்போது நிலைமை இன்னும் மோசமாகக் கூடும்.

இன்னொருபுறம் அரசுத் துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்கப்படுகின்றன, வாஜ்பாய் இதற்கென்று தனியாக ஒரு அமைச்சரையே நியமித்துள்ளார்.

வங்கிகள் உரிய இலாபத்தில் இயங்காததால் தனியார் முதலாளிகள் அனுமதிக்கப்படுவதாக வாஜ்பாய் நியாயம் சொல்கிறார். அரசுத்துறை வங்கிகளின் வாராக் கடன் ரூ 58,000 கோடி. இதில் பெரும் பகுதி 200 பெரு முதலாளிகளிடமிருந்து மட்டும் நிலுவை உள்ளது கவனிக்கத்தக்கது. இந்த முதலாளிகளோடு கைகோத்துக் கொண்டுதான் பா.ஜ.க. அரசு வங்கிப் பங்குகளை விற்று வருகிறது.

மின்வாரியத்தைத் தனியாருக்கு விற்க இந்திய அரசு முடிவு செய்து மாநில அரசுகளை நிர்ப்பந்தித்து வருகிறது. ஏற்கெனவே அமெரிக்க என்ரான் நிறுவனத்தை மின் உற்பத்தியில் அனுமதித்த மகாராட்டிர அரசு ஒப்பந்த நிபந்தனையில் சிக்கி வாங்காத மின்சாரத்திற்கு 30 கோடி ரூபாய் கொட்டி அழுகிறது. மின் கட்டணம் பன் மடங்கு உயர்ந்து, பொதுமக்களை பாதிப்புடன் தொழில் உற்பத்தியையும் தாக்குகிறது. ஆந்திராவில் இந்தக் கொள்கையால் ஏற்பட்ட மின் கட்டண உயர்வு துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது.

வாஜ்பாய் அரசின் பொருளாதாரக் கொள்கையால் விவசாயமும் நசிந்து, தொழில் துறையும் முடங்கி மொத்தத்தில் வேலை வாய்ப்பைப் பறித்து விட்டது.

ஒட்டாண்டியாகிக் கொண்டிருக்கும் மக்களை மதத்தின் பேரால் மோதவிட்டு இரத்தம் குடிக்கும் ஓநாயாக ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கூட்டம் வெறி கொண்டு அலைகிறது.

இதற்கு வாஜ்பாய் அரசு அரணாக விளங்குகிறது,. வாஜ்பாயின் மிதவாத முகமூடி கிழிந்த பின்னும் கூட 'பெரியாரின் விரல் பிடித்து நடந்த' கருணாநிதி பா.ஜ.க. கூட்டணியில் தொடர்வது பதவி அரசியலின் விகாரமான வெளிப்பாடு. தி.மு.க., ம.தி.மு.க, பா.ம.க. கட்சிகள் தமது தேவைகளுக்கு ஏற்ப பெரியார் பெயரையும், சமூக நீதி முழக்கத்தையும் பயன்படுத்திக் கொள்ளுகின்றன.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், உழைப்பாளர்களுக்கும், சிறுபான்மை சமூகத்தினருக்கும் ஒட்டு மொத்த எதிரி பார்ப்பனிய பா.ஜ.க. அரசும், அதன் பிரதமர் வாஜ்பாயும் என்பது வெட்ட வெளிச்சமாக அம்பலமான பிறகும் அந்தக் கூட்டணியில் ஒட்டிக் கொண்டு, அதே நேரம் மதசார்பின்மை, சமூக நீதி என்று பேசுவது தமிழகக் கட்சிகளின் வெட்கமற்ற நாற்காலி நைப்பாசையையே காட்டுகிறது.

இது தமிழகத்திற்கு நல்லதல்ல.

உடனே தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. கட்சிகள் வாஜ்பாய்க்கு கொடுத்து வரும் ஆதரவைத் திரும்பப் பெற வேண்டும்♦



படிப்பகம்

www.padippakam.com

# திருக்குறள் தமிழ்த் தேசிய நூலே!

- பெ. மணியரசன்

திருக்குறள் ஒரு தத்துவ நூலாகும். மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயும் மனிதர்களுக்கிடையேயும் உள்ள உறவுபற்றி பேசுவது தத்துவம். இந்த உறவை, மதத் தத்துவங்கள் கடவுளை மையமாக வைத்து விளக்குகின்றன. இதில், திருக்குறள் வேறுபாடான நூல். இது முழுக்க முழுக்கக் கடவுளை மையப்படுத்தவும் இல்லை; முற்றாகக் கடவுளை ஒதுக்கிடவும் இல்லை. வாழ்வியலை, மனித சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்நூலை யாத்துள்ளார் திருவள்ளுவர்.

சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்

என்று கல்லாடம் பேசுவது பொருள் பொதிந்த வரையறுப்பு. சமய நூல் ஆசிரியர்களின் முடிவுகளின் அடிப்படையில் உலகத்தைப் பார்க்காமல் நடைமுறை வாழ்வியலின் அடிப்படையில் உலகத்தைப் பார்த்து உண்மைப் பொருளை திருவள்ளுவர் கூறினார் என்று கல்லாடம் பாராட்டுகிறது.

ஒப்புரவறிதல் என்ற அதிகாரத்திற்கு முன்னுரை எழுதிய பரிமேலழகர் கூறுவது கவனிக்கத்தக்கது.

அஃதாவது உலக நடையினை யறிந்து செய்தல். உலக நடை, வேத நடை போல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே யறிந்து செய்யுந் தன்மைத் தாகலின், ஒப்புரவறித லென்றார். மேல், மனம், மொழி மெய்களால் தவிரத் தகுவன கூறினார். இனிச் செய்யத் தகுவனவற்றுள் எஞ்சி நின்றன கூறுகின்றார்.



ஆகலின், இது தீவினையச்சத்தின் பின் வைக்கப்பட்டது.

திருவள்ளுவர் தமது காலத்தில் நிலவிய பல்வேறு தத்துவங்கள் சமயக் கோட்பாடுகளையெல்லாம் கற்றுத் திறனாய்வு செய்திருக்க வேண்டும். அவற்றுள் கொள்ளுவனகொண்டு தள்ளுவன தள்ளி சிந்தித்துள்ளார். சமஸ்கிருதம் போன்ற பிறமொழித் தேர்ச்சியும் அவர்க்கிருந்திருக்க வேண்டும். இதனால் வெவ்வேறு சமயச் சொல்லாட்சிகளும் திருக்குறளில் இடம் பெறலாயிற்று.

அவர், வேதம், வைசேஷிகம், நியாய வைசேஷிகம், சாங்கியம், சமணம், பௌத்தம், லோகாயதவாதம் போன்ற கோட்பாடுகளைக் கற்றுத் திறனாய்வு செய்திருக்க வேண்டும்.

இதனால், வெவ்வேறு சமயத்தவரும் திருக்குறள் தம் தம் சமய நூல் என்று உரிமை கொண்டாடும் நிலை ஏற்பட்டது. சமண நூல், பௌத்த நூல் என்றெல்லாம் கூறிக் கொள்கின்றனர். திருவள்ளுவரைச் சைவர் என்றும் கூறுவர், 'தாமரைக் கண்ணான் உலகு' என்று கூறியதால் வைணவர் என்று கூறுவாரும் உளர். ஜி.யு. போப், மயிலாப்பூரில் வசித்த திருவள்ளுவர் பறங்கி மலைக்குச் சென்று ஏசுவின் சீடரான புனித தாமசின் சொற்பொழிவுகளைக் கேட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார். அயோத்தி தாசப் பண்டிதர் திருக்குறளை திரிக்குறள் என்றே குறிப்பிட்டார். பௌத்த சமயத் திரிபீடகம் போன்றது திரிக்குறள் என்றார் அவர்.

அவரவரும் அவரவர் சார்பாகத் திருவள்ளுவரை வரித்துக் கொள்வதைப் பார்த்தால், கடவுளைப் பற்றிக் கம்பர் கூறிய பாடல்தான் நினைவுக்கு வரும்.

ஒன்றே யென்னின் ஒன்றேயாம்
பலவென்று ரைக்கின் பலவேயாம்
அன்றே யென்னின் அன்றேயாம்



படிப்பகம்

www.padippakam.com

ஆமென் றுரைக்கின் ஆமேயாம்
இன்றே யென்னின் இன்றேயாம்
உளதென் றுரைக்கின் உளதேயாம்
நன்றே நம்பிக் குடிவாழ்க்கை
நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா

திருக்குறள், கடவுள் கருத்துப் போன்ற மாயை அல்ல. சமயச் சார்புகளை நீக்கிவிட்டு பார்க்கப்படவேண்டிய தத்துவ நூல்.

ஒரு தத்துவத்தைத் தாங்குவதற்கு ஒரு அடித்தளக் கோட்பாடு தேவை. மார்க்சிய சிந்தனையை "உழைப்பு" பற்றிய கோட்பாடு தாங்குகிறது. திருவள்ளுவத்தை "அறம்" என்ற கோட்பாடு தாங்குகிறது.

இக்காலத்தில் ஒரு பெரிய தூண் மீது பல அறைகளைக் கொண்ட மாளிகை கட்டப்படுவதுபோல் அறம் என்ற பெருந்தூண்மீது அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற கூடங்களைக் கொண்ட திருக்குறள் கட்டப்பட்டிருக்கிறது.

"அறம்" என்பது சமஸ்கிருத சாத்திரங்களில் கூறப்படும் "தர்மம்" என்பதன் தமிழாக்கம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. திருவள்ளுவரின் "அறம்" மனித வாழ்க்கைக்குரிய பல கோட்பாடுகளுள் ஒன்று அல்ல. அது முழுநிறைவான வாழ்வியல் கோட்பாடு. அதன் மேல் தான் மற்ற கோட்பாடுகள் எழுப்பப்படுகின்றன.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்று சிலப்பதிகாரம் கூறும் அறம், வாழ்வியலின் அடித்தளக் கோட்பாடு என்ற பொருளில்தான் கையாளப்பட்டிருக்கிறது. அரசியலில் தவறு செய்தவர்களை அறம் தண்டிக்கும் என்னும்போது, அது "தர்மம்" என்ற சுருங்கிய பொருளில் கையாளப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தர்மம் தலைகாக்கும் என்பது போன்ற வடமொழி மரபு சார்ந்த கருத்தியலுக்கும் அரசியல் பிழைத் தோர்க்கு அறங்கூற்றாகும் என்ற தமிழ்க் கருத்தியலுக்கும் இடையே வேறுபாடு உண்டு. வடநூல் மரபுப்படி அரசன் தன்னைக் காத்துக் கொள்ள எந்த அதர்மத்தையும் செய்யலாம். அங்கு தர்மம் அரசனைத் தண்டிக்காது.

தர்மம் என்ற சொல்லும் சமஸ்கிருதத்தின் சொந்தச் சொல் அல்ல. அது பாலி மொழியின் "தம்மம்" என்ற சொல்லில் இருந்து வந்ததாக அறிஞர்கள் கூறுவர். புத்தரின் தம்மம் உயரிய வாழ்வியல் கோட்பாடுகளைக் கொண்டது. சமஸ்கிருத சாத்திரங்கள் தம்மத்தை - தர்மமாக்கி, தர்மத்தை வர்ணாசிரம தர்மமாக்கிச் சீரழித்தன. சமஸ்கிருதம் தானும் வாழாது தன்னோடு சேர்ந்தவரையும் வாழவிடாது.

அறத்துப்பாலின் முகப்புரை போல் உள்ள அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில், ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானது இல்லை. அதனை மறப்பதை விட கேடு இல்லை என்கிறார் வள்ளுவர். (அறத்தினூஉங்கு ஆக்கமுமில்லை; அதனை மறத்தலினூஉங்கு இல்லை கேடு)

திருவள்ளுவர் "அறம்" என்று கூறுவது யாது? பிறர்க்குத் தீங்கிழைக்காது பிறரை வாழவைத்துத் தானும் வாழும் நெறியையே அவர் அறம் என்கிறார். பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடம் கொடுக்காமல் (குறள் 35) மாசில்லாத, தூய்மையான மனதைப் பெற்றிருப்பதே (34) அறம் என்கிறார்.

பகுத்துண்டு பல்லுயிர் காத்தலே தலையாய அறம் (322) என்கிறார் வள்ளுவர். அறத்தின் வழியில்தான் இல்வாழ்க்கை அமைய வேண்டும் என்று வலியுறுத்தும் (49) அவர் பொருள் சேர்க்கும் போது பழிக்கு அஞ்சி சேர்த்து அப்பொருளை செலவு செய்யும் போது பலர்க்கும் அளித்துப் பகுத்துண்ண வேண்டும் (44) என்கிறார்.

செல்வத்தைப் பொதுவாகத் துய்க்க வேண்டும் என்ற கருத்து திருக்குறள் எங்கும் விரவிக் கிடக்கிறது. துல்லியமாகப் பார்த்தால், இந்தப் பொதுமையே அறத்தின் சாரம் என்று திருவள்ளுவர் பார்க்கிறார்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமது திருக்குறள் மெய்யுரையில் இது குறித்துப் பேசுகிறார்.

தமிழியல் படி - பொதுமையே- பொதுவுணர்வே - மக்கள் யாவருக்கும் இருக்க வேண்டிய - நல்லுணர்வுகளே நன்னெறிகளே அறம்.

இந்த அறத்தை அறத்துப்பாலில் வள்ளுவர் வலியுறுத்துதல் இயல்பே. பொருட்பாலிலும், இன்பத்துப் பாலிலும் அறத்தின் இன்றியமையாத் தன்மையை அதன் மேன்மையை வலியுறுத்துவதைப் பார்க்கும் போதுதான் பொதுமையுணர்வு சார்ந்த அறமே திருக்குறளைத் தாங்கி நிற்கும் தூண் என்பது விளங்கும்.

செய்க பொருளை என்று கட்டளையிடும் (759) வள்ளுவர், திரட்டிய பொருளை எவ்வாறு செலவிட வேண்டும் என்று கூறுகிறார். பொருட்பாலில் **நன்றியில் செல்வம்** என்னும் அதிகாரத்தில், செல்வத்தைப் பலர்க்குப் பயன்படும்படி செலவழிப்பது குறித்து விரிவாகப் பேசுகிறார் வள்ளுவர்.

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம்
இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண்டாயினும் இல் (1005)

பிறர்க்குக் கொடுத்து உதவுவதும் தான் நுகர்வதும் இல்லாதவர்க்கு மேன்மேலும் பெருகிய பல கோடிப் பொருள் உண்டானாலும் பயன் இல்லை.

தானும் நுகராமல் தக்கவர்க்கும் கொடுத்து உதவாமல் வாழ்கின்றவன்



படிப்பகம்

www.padippakam.com

தன்னிடமுள்ள பெருஞ் செல்வத்திற்கு ஒரு நோய் ஆவான் (1006)

காதலியின் புணர்ச்சியால் ஏற்படும் இன்பம் தம்முடைய வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பகுத்துக் கொடுத்து உண்டதால் ஏற்படும் இன்பம் போன்றது (1107) என்று இன்பத்துப்பால் புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்தில் வள்ளுவர் கூறுவது பெரு வியப்பை ஏற்படுத்துகிறது. வள்ளுவரின் உள்ளம் எப்போதும் எதை நாடுகிறது என்பதைச் சுட்டுகிறது. ஆக பொருட்பாலும், இன்பத்துப்பாலும் அறம் என்ற தூணின் மேல் நிற்பது தெரிகிறது.

வள்ளுவரின் அறக் கோட்பாட்டிற்கும் வட நூலாரின் தர்மக் கோட்பாட்டிற்கும் இடையே வேறுபாடு நிறைய உண்டு. அவர்களின் ராஜதர்மத்திற்கும் வள்ளுவரின் அரசியல் அறத்திற்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, கண்ணோட்டம் என்ற அதிகாரங்களில் மன்னன் செய்யத் தக்கன, செய்யக்கூடாதவை பற்றி விரிவாகப் பேசுகிறார் வள்ளுவர்.

மன்னனுக்கு வெற்றி தருவது வேல் அன்று; அவனது செங்கோலே; அதுவும் கோணாதிருக்குமாயின் (546). குடிகளை வருத்தும் தொழிலை மேற்கொண்டு முறையல்லாத செயல்களைச் செய்து நடக்கும் அரசன் கொலைத் தொழிலைக் கொண்டவரை விடக் கொடியவன் (551).

இதற்கு மாறாக மனு, ஓர் அரசன் தனது அரசைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓர் ஊரையே அழிக்கலாம் என்கிறார். மனுவின் ராஜதர்மம் அரசனை கேள்விக்கு அப்பாற்பட்டவன் ஆக்குகிறது.

வடநூலாரின் வர்ணாசிரம தர்மம் எவ்வளவு கொடுமையானது என்று நாம் அறிவோம். பிறப்பிலேயே உயர்வு தாழ்வு கற்பிப்பது அது.

இப்படியாகத் தர்மம் ஒரு தலைப் பட்சமாகவும் ஆதிக்க சக்திகளுக்கு ஆதரவாகவும் வடக்கே வைக்கப்பட்டது. தர்மம் என்பதைத் தானம் என்று குறுக்கி, தானமும் பார்ப்பனர்களுக்குக் கொடுப்பது என்று அவர்கள் சுருக்கினார்கள். அந்த பார்ப்பனிய தர்மம் தமிழ்நாட்டில் புகுந்து கோலோச்சி இன்று வரை செய்து வரும் கொடுமை கொஞ்ச நஞ்சமன்று.

வள்ளுவர் தானம் என்று குறிப்பிடாமல் ஈகை என்று கூறினார். "தமிழ் இலக்கியத்தில் உலகாயதம்" என்ற நூலில் பேரா. க. நெடுஞ்செழியன் கூறுவது கவனிக்கத்தக்கது.

சமூக ஒப்புரவின் அடிப்படையில் வற்புறுத்தப்படும் ஈகை வைதீக மரபில் தன் பரந்துபட்ட பொருள் இழந்து தானம் என்றாகிறது. அத்தானமும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அது தர்மமாகிறது. தான தர்மம் என்பதன் கருத்தும் அதுவே.

இதற்கு நேர்மாறாகத் திருவள்ளுவர் கூறுகிறார். வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை. மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையவை. (221).

சீவரமங்கலம் செப்பேடு (பாண்டியர் செப்பேடு பத்து) செப்புவதை பேரா. க. நெடுஞ்செழியன் மேற்சொன்ன உலகாயதம் நூலில் எடுத்துக் காட்டுகிறார்.

பிராமணர்களுக்குத் தானஞ் செய்ததைக் காப்பதைக் காட்டிலும் புண்ணியத்திற்குக் காரணமானது வேறெதுவும் இப்பூமியில் இல்லை. அதை அபகரிப்பதைக் காட்டிலும் பாவத்திற்குக் காரணமானது வேறெதுவும் இப் பூவுலகில் இல்லை. விஷம் என்று சொல்லப்படுவது விஷமல்ல. பிராமணன் சொத்துதான் விஷம். விஷம் ஒருவனை மட்டும் தான் கொல்லும். பிராமணன் சொத்து அபகரிப்பவன் புத்திர பௌத்திரர்களை அழிக்கும்.

மனதில் ஈரமும் அருளும் சுரந்து, இல்லாதவர்க்கு வழங்கும் ஈகை ஒட்டு மொத்த சமுகத்தின் மீது அக்கறை கொண்ட மனித நேய உணர்ச்சி. வைதீக மதம் கூறும் தானமோ, புண்ணியம் என்று ஆசை வார்த்தை காட்டுகிறது அல்லது பாவம் என்று அச்சுறுத்துகிறது. அதோடல்லாமல் பார்ப்பனர்களுக்குக் கொடுப்பதே தர்மம் என்கிறது.

திருவள்ளுவர் பார்ப்பனிய எதிர்ப்பாளர் - நெய் முதலிய பொருட்களைத் தீயில் கொட்டி ஆயிரம் கேள்விகள் - யாகங்கள் செய்வதை விட ஓர் உயிரை கொன்று உடம்பை தின்னாதிருப்பது மேல் (251) என்கிறார். பண்டைக் காலத்தில் பார்ப்பனர்கள், யாக குண்ட நெருப்பில் ஆடுமாடுகளை வெட்டிப் போட்டு, வெந்த அவிர்பாகத்தை உண்டனர் என்பதை இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

வேதத்தைக் கேள்வி கேட்பவன் ஈனப் பிறவி என்று மனு நூல் கூறுகிறது. வள்ளுவமோ, 'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்று அறிவுறுத்துகிறது.

திருவள்ளுவரின் அறம் சமத்துவக் கொள்கையை - பொதுமைக் கொள்கையை அடிநாதமாகக் கொண்டது. அதனால்தான் அவர் செல்வம் - ஒருவருடைய சொத்து, பலருக்கு பொதுவான ஊருணி போல் பயன்பட வேண்டும் (215) என்றும், ஊர் நடுவே பழுத்த பொது மரம் போல் இருக்க வேண்டும் (216) என்றும் கூறுகிறார்.

அப்படிப் பயன்படாத சொத்தை வலுவந்தமாகப் பிடுங்கி மக்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று வள்ளுவர் வழி காட்டுகிறார். உண்ட எச்சில்



படிப்பகம்

www.padippakam.com

கையையும் உதறாத கயவர்களிடம் சிக்கிக் கொண்ட செல்வத்தை, கையை வளைத்து அவர் கன்னத்தை உடைத்து எடுக்க வேண்டும் (1077) என்று தெளிவுறுத்துகிறார்.

சமத்துவசமூகச் சிந்தனையை அவர் வாழ்ந்த கால சூழலுக்கேற்ப, வள்ளுவர் வழங்கியிருக்கிறார். இந்த சமத்துவச் சிந்தனை தமிழ்ச் சிந்தனை மரபாகும்.

இந்திரர் அமிழ்தம் கிடைத்தாலும் தனியே உண்ணாத, புகழ் எனின் உயிரும் கொடுக்கின்ற, பழி எனின் உலகுடன் தந்தாலும் ஏற்காத உள்ளம் படைத்து, தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் உயர்ந்தோர் இருப்பதால் தான் இந்த உலகம் இயங்குகிறது என்று கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற மன்னன் (புறநானூறு) பாடிய மரபல்லவா தமிழ்ச் சிந்தனை மரபு.

தமிழ்ச் சிந்தனை மரபின் சாரமாக விளங்கும் திருக்குறள் தமிழ்த் தேசிய நூலாகும். அதனை இந்திய தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்று நாம் கோரக் கூடாது. வள்ளுவத்தின் மீதுள்ள மதிப்பின் காரணமாக, அவ்வாறு நம் அறிஞர்கள், அன்பர்கள் கோருகின்றனர். அதனைத் தவிர்க்க வேண்டும்.

தமிழ்த் தேசிய நூலான திருக்குறளை இந்திய தேசிய நூல் என்று கூறி நாமே தாரை வார்க்கக் கூடாது. வடநூல் ஆதரவாளர்கள் சிலர் "வல்லப" என்ற பெயருடைய வடவர் தமிழில் எழுதிய நூல்தான் திருக்குறள் என்று இப்போதே கூறிவருகின்றனர். அந்நூலை இந்திய தேசிய நூலாக்கினால், அதனை வட நாட்டு நூல் என்று உரிமை கொண்டாடத் தொடங்குவர். வடநாட்டு வைதீக மரபை எதிர்த்து எழுந்த நூல் திருக்குறள்.

திருக்குறளைத் தமிழ்த் தேசிய நூலாகத் தமிழ் மக்கள் அறியும்படி அறிஞர்களும் அன்பர்களும் முயற்சி எடுக்க வேண்டும்.

## சாகித்திய அகாதெமி விருது தி.க.சிக்கு வழங்கப்பட்டது!

தி.க.சி. என் அன்புடன் அழைக்கப்படும் தி.க. சிவசங்கரன் எழுதிய "விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள்" என்ற புத்தகம், 2000 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது.

தமிழ் புத்தகத்துக்கான விருதைத் தேர்ந்தெடுத்த நடுவர் குழுவில் வல்லிக்கண்ணன், வி.சி.குழந்தைசாமி, கே. சின்னப்ப பாரதி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இந்த விருது தாமிரப்பத்திரமும் ரூ 25 ஆயிரம் ரொக்கப் பரிசும் கொண்டது. 2001 பிப்ரவரி 20ஆம் தேதி தில்லியில் நடைபெறும் விழாவில் இந்த விருது வழங்கப்படும்.

## பழ.நெடுமாறன் தலைமையில் மனித நேயப் பயணம்

கன்னட நடிகர் ராஜ்குமாரை மீட்டு வந்த திரு பழ. நெடுமாறன், பேரா. பா.கல்யாணி, கொளத்தூர் மணி, புதுவை சுகுமாறன் ஆகியோரும் மக்கள் உரிமைக் கூட்டமைப்பில் உறுப்பு வகிக்கும் அமைப்புகளின் தலைவர்களும் தமிழகம் தழுவிய மனித நேயப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

28.12.2000 அன்று முற்பகல் நாமக்கல்லில் திரு நா.ப. இராமசாமி அவர்கள் தலைமையிலும் அன்று மாலை கோவையில் திரு கோவை இராமகிருட்டிணன் தலைமையிலும் எழுச்சியாகக் கூட்டம் நடந்தது.

அடை மழை காரணமாக 29.12.2000 இரவு தஞ்சையிலும் 30.12.2000 முற்பகல் குடந்தையிலும் நடைபெற இருந்த மனித நேயப் பயணக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

30.12.2000 மாலை மயிலாடுதுறையில் தோழர் நாக. இரகுபதி தலைமையில் "வாழ்க்கை" திருமண மண்டபத்தில் மிக எழுச்சியாக நடந்தது. அரங்கத்தில் இடமின்றி மக்கள் வெளியில் நின்று கேட்கும் அளவிற்குக் கூட்டம் திரண்டிருந்தது.

கூட்டம் தொடங்குவதற்கு முன் அண்மையில் காலமான தமிழ்த் தேசிய வழக்கறிஞர் மயிலாடுதுறை இராமதாசு அவர்களின் படத்தைத் திரு பழ.நெடுமாறன் திறந்து வைத்தார். மயிலாடுதுறை பெரியார் மையத்தின் சார்பில் வெளிவரும் "பெரியார் குரல்" என்ற மாத இதழ் வெளியிடப்பட்டது.

கூட்டத்தில் திரு பழ.நெடுமாறன், பெ.மணியரசன், தியாகு, சுபவீரபாண்டியன், விடுதலை இராசேந்திரன், கவிஞர் அறிவுமதி, பேரா.த.செயராமன், பேரா. பா.கல்யாணி, கொளத்தூர் தா.செ.மணி, புதுவை சுகுமாறன், குத்தாலம் சட்டப் பேரவை உறுப்பினர் கல்யாணம் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

இறுதியில் திரு கு. பெரியசாமி நன்றி கூறினார்.

மேலும் அடுத்தடுத்து புதுக்கோட்டை, திருச்செந்தூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய ஊர்களில் சிறப்பாகக் கூட்டங்கள் நடந்தன.



படிப்பகம்

www.padippakam.com

## திசை காட்டும் திண்டிவனம் பேரணி

# தமிழக இளைஞர் முன்னணி மாநாடு

எழுச்சிப் பேரணி



2000 டிசம்பர் 16,17 நாட்களில் தமிழக இளைஞர் முன்னணியின் 4ஆவது தமிழக மாநாடு திண்டிவனம் பவணந்தி அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 16.12.2000 அன்று பேராளர்கள் மாநாடு நடந்தது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த கால போராட்டங்கள், இயக்கங்கள் திறனாய்வு செய்யப்பட்டன. வருங்கால இயக்கங்களுக்கு வழிகாட்டும் அணுகுமுறைகள், திட்டங்கள் வகுக்கப்பட்டன. புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

டிசம்பர் 17 காலை திண்டிவனத்தில் செஞ்சி சாலையிலிருந்து தோழர் ம. பாபு (தலைவர் த.இ.மு) தலைமையில் எழுச்சி மிகு பேரணியை தோழர் இராசேந்திர சோழன் தொடங்கி வைத்தார். தஞ்சை ரெங்கராஜின் வீரசோழத் தப்பாட்டக் குழுவினரின் இசை முழக்கத்தோடு பேரணி பல்வேறு வீதிகள் வழியாக மாநாட்டு மண்டபத்தை (எம்.ஆர்.எஸ். இலட்சுமி மகால்) அடைந்தது.

தோழர் ச. யோகநாதன் பொது மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். வரவேற்புக்குழுத் தலைவர் ஆசிரியர் மு. கந்தசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். புகழேந்தியின் "உறங்கா நிறங்கள்" ஓவியக் கண்காட்சியை திரு. நா. அருணாசலம் திறந்து வைத்தார். தோழர் கி. வெங்கட்ராமன் தோழர் த. பவணந்தியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். மாநாட்டைத் தொடங்கி வைத்து திரு பழ.நெடுமாறன் சிறப்புரையாற்றினார்.

காஞ்சி கலைக் குழுவினரின் எழுச்சி இசைக்குப் பிறகு கவிஞர் தணிகைச் செல்வன் தலைமையில் 'முகவரித் தேடி' என்னும் பொருளில் கவிஞர் அறிவுமதி, சத்தியவாடி இராமலிங்கம், செந்தில்குமார், வில்மணி, ஆகியோர் கவிதை வாசித்தனர்.

**பட்டிமன்றம்**

தமிழின ஒற்றுமைக்கு பெரிதும்

### த.இ.மு.வின் புதிய நிர்வாகிகள்

16.12.2000 அன்று நடைபெற்ற பேராளர் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள்

| | |
|---|---|
| தலைவர் : | ம. பாபு |
| துணைத் தலைவர் : | இரெ. இனியன் |
| பொதுச் செயலாளர் : | நா. வைகறை |
| துணை பொதுச் செயலாளர் : | இரெ. சிவராசு |
| பொருளாளர் : | ப. பாண்டியன் |

மையக்குழு உறுப்பினர்கள்

1. இரா.க. முனியாண்டி
2. ச. மணிவண்ணன்
3. க. காமராசு
4. ந, தமிழ்ச் செல்வன்
5. கு. முனியமுத்து
6. இரா. வெங்கடேசன்
7. பரமசிவம்
8. பா. பிரபாகரன்
9. சந்திரபாபு



பேராளர் மாநாடு



படிப்பகம்

www.padippakam.com

தடையாக இருப்பது கட்சி அரசியலே! சாதி அரசியலே! என்னும் பொருளில் பேராசிரியர் த. செயராமன் அவர்களை நடுவராக கொண்டு சிறப்பான பட்டிமன்றம் நடைபெற்றது. 'கட்சி அரசியலே' என்ற அணியில் பொறியாளர், இரா. பாலசுப்ரமணியன், ரெ. சிவராசு, இரெ. இனியன் ஆகியோரும் 'சாதி அரசியலே' என்ற அணியில் மருத்துவர் அ. தாயப்பன், அ. பத்மநாபன், சு. அருவி ஆகியோரும் சிறப்பாக வாதிட்டனர்.

இரு தரப்பு வாதங்களையும் சீர்தூக்கிய நடுவர் இரண்டுமே சம அளவு தடைதான் என தீர்ப்பு கூறினார்.

**நிறைவரங்கம்**

தோழர் நா.வைகறை (பொதுச் செயலாளர் த.இ.மு.) தலைமையில் நடைபெற்ற நிறைவரங்கத்திற்கு தோழர் ச. மணிவண்ணன் வரவேற்புரையாற்றினார். 'தமிழர் எதிர்காலம்' என்றப் பொருளில் தோழர் பெ. மணியரசன், 'எதிர்காலப் பண்பாட்டில் பெண்ணுரிமை' என்ற பொருளில் தோழர் சுப. வீரபாண்டியன், அடக்குமுறைச் சட்டங்கள் குறித்து பேரா. பா. கல்யாணி 'திரையுலகில் தமிழர் எதிர்காலம்' என்னும் பொருளில் இயக்குநர் வெ. சேகர், 'ஊடகத்தில் தமிழர் நிலை' குறித்து பேரா. சரசுவதி, 'தமிழ்வழிக் கல்வி' குறித்து புலவர் கி.த. பச்சையப்பன், 'தமிழரின் தொழில் வணிகம்' என்னும் பொருளில் திரு சா.சந்திரேசன், 'மாணவர் எழுச்சி' என்ற




பேரணியில் பெண்கள்

பொருளில் அ.வளவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தோழர் த.பாலகிருஷ்ணன் (பொருளாளர், மாநாட்டு வரவேற்புக்குழு) நன்றி கூறினார்.

மேல்நிலை வகுப்பில் தமிழ் வழியில் படித்தோர்களின் எண்ணிக்கை விகிதத்திற்கேற்ப உயர் கல்வியில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தி 2001 பிப் 15ல் மாவட்ட, வட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது, தை முதல்



நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்க வேண்டும், விரப்பனை பிடிக்க அதிரடிப் படைகளை அனுப்பக் கூடாது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழக இளைஞர் முன்னணியின் நான்காவது தமிழக மாநாடு தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடாகவும் தமிழ்த்தேசப் விரோத சக்திகளுக்கு எதிரான போர்ப் பரணியாகவும் அமைந்தது.

மயிலம், திண்டிவனம் தோழர்களின் கடும் உழைப்பினால் மாநாடு எல்லா வகையிலும் சிறப்பாகவும் நிறைவாகவும் அமைந்தது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தோழர்கள் வாகனங்களில் வந்து பேரணியிலும் மாநாட்டிலும் கலந்து கொண்டனர். பேரணியில் திரளான பெண்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.♦


**மொழிஞாயிறு பாவாணர் மொத்த நூல்கள்**



முன் பதிவுத் திட்டம்

மொத்த விலை உரு.3,000/
முன்பதிவு விலை உரு.2,000/-

மூன்று தவணைகளில்

1. உரு.1000/- 15.1.2001க்குள்
2. உரு.500/- 15.2.2001க்குள்
3. உரு.500/- 15.3.2001க்குள்

கோ.இளவழகன்
**தமிழ் மண் பதிப்பகம்**
அகமது வணிக வளாகம், 2ஆம் தளம்,
293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.




படிப்பகம்

www.padippakam.com

## பழைய பக்கங்களிலிருந்து.......

# "புதிய தமிழகத்தில் மக்கள் உரிமை"

- சாமி சிதம்பரனார்

தொகுப்பு : **அமரன்**
பாவேந்தர் செய்தி நிலையம்,
தஞ்சை-1

**எல்லோரும் சமம்**

புதிய தமிழகத்திலே குடி உரிமை அதாவது பிரஜா உரிமை பெற்றவர்கள் அனைவரும் சமமாகவே கருதப்படுவார்கள்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அனைவரும் தமிழர்கள். தமிழ் நாட்டின் முன்னேற்றத்திலே கவலை கொண்டவர்கள் எல்லோரும் தமிழர்கள். தமிழர் கலையையும், பண்பாட்டையும் ஒப்புக் கொள்ளுகிறவர்கள், இவைகளை வளர்க்கப் பாடுபடுகிறவர்கள் அனைவரும் தமிழர்கள். விவசாயி, பாட்டாளி மக்களின் ஆட்சியே தமிழ் நாட்டு ஆட்சியாக விளங்க வேண்டும் என்பதை முழுமனதுடன் ஒப்புக் கொண்டு இதற்காகப் பணியாற்றுகிறவர்கள் எல்லோரும் தமிழர்கள். இவர்கள் தமிழ் நாட்டில் குடியுரிமை பெற்றுத் தமிழர்களாகவே வாழ்வார்கள். இவர்களிடையே சாதி, மதம் காரணமாக எவ்வித வேற்றுமையும் பாராட்டப்படமாட்டாது.

தமிழுக்கும் தமிழர் வாழ்வுக்கும் கேடு சூழ்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தமிழின் துரோகிகளாகவே, தமிழரின் எதிரிகளாகவே, எண்ணப்படுவார்கள். அவர்களுடைய பிரஜா உரிமை பறிக்கப்படும்.

இன்றைய தமிழ்நாட்டிலேயே பல மதத்தினர் வாழ்கின்றனர். இவர்களுள் இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியோரை முதன்மையாகக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டில் வாழும் இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் தமிழையே தாய் மொழியாகக் கொண்டவர்கள்; தமிழ்க் கலையையோ, தமிழர் நாகரிகத்தையோ வெறுப்பவர்கள் அல்லர். இந்துக்களைப் போலவே முஸ்லீம்களிலும் கிறிஸ்துவர்களிலும் தமிழ்ப் புலமை வாய்ந்தவர்கள் பலர் உண்டு. இவர்கள் மதத்தில் வேறுபட்டிருந்தாலும் இனத்தில் தமிழர்கள் தான். இவர்களுடைய மத சுதந்திரத்திற்குத் தமிழகத்தில் யாதொரு ஆபத்தும் ஏற்படாது.

யாராயிருந்தாலும் தனிப்பட்ட முறையில் அவர்களுடைய மத நூல்களைப் படிக்கவும் மதக்கோட்பாடுகளைப் பின்பற்றவும் அவர்களுக்கு நம்பிக்கையுள்ள தெய்வங்களை வணங்கவும் முழு உரிமையுண்டு. இவைகள் ஒவ்வொரு மனிதரின் தனிப்பட்ட உரிமை. இந்தத் தனிப்பட்ட உரிமைகளிலே புதிய தமிழக ஆட்சி தலையிடக் கூடாது; தலையிடாது.

ஆனால் யாராயிருந்தாலும் சாதி, சாதியின் பெயராலோ, மதத்தின் பெயராலோ, மற்ற மக்களைச் சுரண்டவோ ஏமாற்றவோ அடிமைப்படுத்தவோ புதிய தமிழகத்தில் இடமிருக்காது.

இந்து மதத்தின் பெயரால் இன்று நடைபெறும் பித்தலாட்டப் பிரச்சாரங்களுக்கு இடமிருக்காது. இந்து மதக் கோட்பாடுகளின் பெயரால் புராணங்களின் பெயரால் தெய்வங்களின் பெயரால் பொது மக்களை மூட நம்பிக்கைப் படுகுழியிலே தள்ள முடியாது. பொது மக்களின் உழைப்பையும் செல்வத்தையும் சுரண்ட முடியாது.

முஸ்லீம்களும் மதத்தின் பெயரால் யாரையும் அடக்க முடியாது, சுரண்ட முடியாது. எந்தப் பொது மக்களின் முன்னேற்றத்தையும் தடைப்படுத்த முடியாது. "

இதைப் போலவே கிறிஸ்தவர்களும் மதத்தின் பெயரால் பொதுமக்களின் உழைப்பைக் கொள்ளை கொள்ள முடியாது.

சுருங்கக் கூறினால் மதச் சுரண்டல்களுக்குப் புதிய தமிழகத்திலே இடமில்லை. மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு எவரும் உழைப்பற்ற சோம்பேறிகளாக உல்லாச வாழ்க்கை நடத்தப் புதிய தமிழகம் இடம் கொடுக்காது.

**மொழியுரிமை**

புதிய தமிழகத்தில் தமிழ்மொழிதான் அரசாங்க மொழி. புதிய தமிழகத்தில் வாழும் குடிமக்கள் அனைவரும் தமிழ் மொழியைக் கட்டாயமாகப் படித்தே தீர வேண்டும். தமிழ் தெரியாதவர்களுக்குக் குடி மக்களுக்குரிய உரிமை கூட வழங்கப்படமாட்டாது. அவர்கள் வேற்று நாட்டுக் குடி மக்களாகவே கருதப்படுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இதைத் தவிர மக்கள் விருப்பத்திற்கு மாறாக எந்த மொழியும் கட்டாயப்படுத்தப்படமாட்டாது. இன்றிருப்பது போன்ற கட்டாய இந்தித்திணிப்புக்கு இடமே இராது. மக்கள் விரும்பினால் எந்த மொழியையும் கற்கலாம்.

ஆகவே புதிய தமிழகத்தில் ஏமாற்றுக்காரர்களுக்கு இடமில்லை. சுரண்டல் கொள்ளைக்காரர்களுக்கு வழியில்லை. பிறர் உழைப்பில் வாழும் பித்தலாட்டக்காரர்களுக்கு வாழ்வில்லை. பொதுமக்களை அடக்கி நசுக்கிக் கொண்டிக்கும் அக்கிரமக்காரர்கள் ஆதிக்கம் செலுத்தமுடியாது. இதைத் தவிர தனிப்பட்ட எந்த மக்களின் மத, கலை, நாகரிகக் கொள்கைகளுக்கும் எவ்விதத் தடையும் ஏற்படாது.

நூல் : புதிய தமிழகம்
பக்கம் 88-92
ஆசிரியர் : சாமி. சிதம்பரனார்
பதிப்பு 1-12-1952

## மோகன் குழு பரிந்துரையை ரத்து செய்! த.தே.பொ.க. கண்டனக் கூட்டங்கள்

1999 ஜுலை 23 நெல்லை மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை தொடர்பாக மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுக்கச் சென்ற மக்கள் மீது காவல்துறை நடத்திய தாக்குதலில் தாமிரபரணியில் 17 பேர் மாண்டனர். இப்படுகொலையை விசாரிக்க நீதிபதி மோகன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் சார்பில் வைக்கப்பட்ட அறிக்கை பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராகவும், அதிகாரிகளுக்கு ஆதரவாகவும் இருந்ததைக் கண்டித்து இந்த அறிக்கையை ரத்து செய்யக் கோரி டிச.25 வெண்மணி நாளில் கண்டனத் தெருமுனைக் கூட்டங்கள் த.தே.பொ.க. சார்பில் நடைபெற்றன.

### திருத்துறைப்பூண்டி

திருத்துறைப்பூண்டி பழைய பேருந்து நிலையம் அருகில் நடந்த மோகன்குழு அறிக்கை எதிர்ப்புத் தெருமுனைக்கூட்டத்திற்கு தோழர் அரசு (ஒன்றியச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமை தாங்கினார். தோழர் இரா.கோவிந்தசாமி, பெ. மணியரசன், பழனிகுமார் ஆகியோர் பேசினர்.

### பூதலூர்

பூதலூர் தொடர் வண்டி நிலையம் அருகில் கண்டனப் பொதுக் கூட்டம் தோழர் அ. அருள்தாஸ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கி. வெங்கட்ராமன் (தலைமைச் செயற்குழு த.தே.பொ.க.) ரெ.சிவராசு, ஆ. சண்முகம், குழ.பால்ராசு, ரெ. கருணாநிதி, ப. இமான்சேகர் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

### வல்லம்

அண்ணாசிலை அருகில் தோழர் பி.முருகையன் (ஒன்றியச் செயலாளர் த.தே.பொ.க.) தலைமையில் நடைபெற்ற தெருமுனைக் கூட்டத்தில் தோழர்கள் க.பழநிமாணிக்கம் (மாவட்டச் செயலாளர், த.தே.பொ.க.) நா.வைகறை ம. அன்பழகன், கு. முனியமுத்து, ரெ.தனசேகரன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.


## தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தி

**குமரியில் தொடங்கி, சென்னை வழியாகக், கோவையில் முடியும்**

**பரப்புரை நெடும் பயணம்**

**(20.1.2001 முதல் 14.2.2001 முடிய)**

தாய்த் தமிழ்க் கல்விப் பணிக் குழு மேற்கொள்ளும் இப்பரப்புரை நெடும் பயணம் வெல்க!

தொடர்புக்கு
**தமிழ்க்குரிசில்**
ஆர் 66/2 அனல் மின் நிலையம்,
மேட்டூர் அணை 636 406.
தொலைபேசி :04298/40416




படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ப் பண்பாட்டில் ஒன்று கலக்கும் குஜராத்தி கழைக் கூத்தாடிகள்

- தா. அருள் எழிலன்

இடைவிடாத பஞ்சம், வன்முறை, பசி இயற்கைச் சீரழிவுகளினூடே தீராத மனவலியோடு இடம் பெயர்தல் நடைபெறுகிறது. மனிதச் சமூகம் தோன்றிய காலம் தொட்டே இவ்வாறு பூர்வீக இடம் என்று எதுவுமில்லாத ஒரு மக்கள் கூட்டம் இன்றுவரை இருந்தே வருகிறது. நாடு விட்டும் நாடும், ஊர் விட்டு ஊரும் இடம் பெயரும் மக்களை நாடோடிகள் என்று அறிகிறோம். உலக அளவில் இம்மக்கள் ஜிப்சிக்கள் என்றும் ஹிப்பிக்கள் என்றும் மட்டுமல்லாமல் பல்வேறு இனக்குழுக்களாகவும் அறியப்படுகிறார்கள்.

மக்கள் கூட்டத்திற்கென்று தாய் மொழியும், உற்பத்தியும் கலைகளும் உள்ளது போலவே நாடோடி குழுக்களுக்கும் உண்டு. இவ்வாறு பல்வேறு நிலப்பகுதிகளையும் கடந்து வரும் நாடோடிகள் தங்கியிருக்கும் நிலத்தில் வாழும் பெரும்பான்மை சமூகத்தின் பண்பாட்டையும் ஏற்றுக் கொண்டு வன்முறையின் விளிம்புகளில் வாழ்வது உலக அளவில் நாடோடிகளுக்கு பழக்கமாகிப் போய் விட்ட ஒன்று. ஜெர்மனியில் 'இனத்தூய்மை' பேசிய இட்லரின் ஆட்சியில் லட்சக்கணக்கான நாடோடிகள் கொல்லப்பட்டதாக ஒரு தகவல் சொல்கிறது.

சென்னையின் புறநகர்ப்பகுதியான மேடவாக்கத்திற்கு அருகில் கழைக்கூத்துநகர் என்னும் இடத்தில் ஒரு குழுவாக வசித்து வருபவர்கள்தான் கழைக் கூத்தாடிகள். கடந்த இருபத்தைந்து வருடங்களாக இந்த இடத்தில் வசித்து வருவதாக சொல்லும் இம்மக்கள் குஜராத்தி மொழியை தாய் மொழியாகக் கொண்டுள்ளனர்.

குஜராத்தியை தாய்மொழியாக கொண்டாலும் தாங்கள் குஜராத்தி இல்லை என மறுக்கிறார்கள். கிட்டத்தட்ட பத்து வருடமாக இங்குள்ள திராவிட கட்சிகளுக்கு வாக்களித்து வருவதாக சொல்லும் இம்மக்களின் அபிமான கதாநாயகன் எம்.ஜி.ஆர் தான். இவர்கள் வாழும் கழைக்கூத்து நகருக்கு எம்.ஜி.ஆருடைய ஆட்சிக்காலத்தில் நிலப்பட்டா வழங்கியது ஒருகாரணமாக இருந்தாலும், விவசாயியாக, கூத்தாடியாக, மீனவனாக நடித்துள்ளதே எம்.ஜி.ஆர் மீதான பற்றுக்குக் காரணம் என கருத இடமுண்டு.

பல்வேறு குடும்பங்கள் இணைந்த ஒரு குழுவாக வசிக்கும் இவர்களில் ஒரே குடும்பத்தில் குறைந்தபட்சம் ஒருவரேனும் ஆடவோ, பாடவோ தெரிந்து வைத்திருக்கின்றனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தகப்பன், தாய், குழந்தைகள் என கூத்தாடினாலும் சில வேளைகளில் தேவைப்படும் கலைஞர்களை பக்கத்து வீடுகளிலிருந்து துணைக்கழைத்து கொள்கின்றனர்.

கூத்து நிகழ்த்தப்படும் இடத்தை பொறுத்தவரையில் சென்னை நகரைச் சுற்றிய பகுதிகளையே நிகழ்த்திடமாக தெரிவு செய்கின்றனர். சென்னையின் குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்பில் வாழும் அடித்தட்டு வர்க்க ரசிகர்களும், சந்தைப்புறங்கள், பரபரப்பான தெருப்பகுதிகள் என நகர்ப்புறம் சார்ந்த பாமர தமிழர்களுமே இவர்களின் பார்வையாளர்கள். எளிமையான ஆனால் வண்ணமயமான ஒப்பனைகளை செய்து கொள்ளும் இவர்கள் கூத்தில் பெரும்பாலும் எம்.ஜி.ஆர். மற்றும் ரஜினி பாடல்களுக்கே நடனம் ஆடுகின்றனர். இம்மாதிரி நடனங்களுக்கு பார்வையாளர்களிடையே பெரும் ஆதரவும், கொஞ்சம் பணமும் கிடைக்கிறது.

ஆயிரமாயிரம் ஆண்டுகாலமாக தங்களின் கூடார வடிவிலமைந்த வாகனங்களையே வாழ்விடமாக கொண்ட இந்த நாடோடிக் கலைஞர்களின் உண்மையான கலை வடிவம் இந்த சினிமா பாடல்களுக்கு ஆடுவது அல்ல. மாறாக கயிற்றில் நடத்தல், கம்பி வளைய தீக்குள் குதித்தல், உயரமான கழியில் நின்று வித்தை செய்தல் என்கிற ரீதியில் இவை விரிந்து செல்லும். ஆனால் இம்மாதிரி விளையாட்டுக்களை நிகழ்த்த காவல்துறையிடம் அனுமதி பெற வேண்டி இருப்பதால் இந்த கலை, சினிமா பாடல்களுக்கான ஆட்டமாக மட்டுமே அமுங்கிப் போனது. இம்மாதிரி நடனங்களில் ஈடுபடும் பெண்கள் ஆண்களின் கிண்டலுக்கும், சில சமயம் வன்முறைக்கும் உள்ளாக நேரிடுகிறது.

ஆபத்தான விளையாட்டுக்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பதை விரும்பாத இவர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். இக்குடியிருப்பில் பயிலும் அனைத்து பிள்ளைகளும் தமிழ் வழிக் கல்வியில் ஆரம்ப பள்ளியில் பயின்று வருகின்றனர்.

எண்பதுகளில் கூத்து நிகழ்த்தும் போது நல்ல வருமானம் கிடைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

தற்காலத்தில் இந்த வருமானம் மிகவும் குறைந்து விட்டது. அன்றாடச் செலவுகளுக்குக் கூட போதுமானதாக இல்லாமல் போனது வேதனை. தமிழில் தகவல் தொழில் நுட்பத்தின் அதீத வளர்ச்சியும், செயற்கைக்கோள் ஒளிபரப்பில் ஏற்பட்டுள்ள மாற்றமும் இந்த வருமானத் தேய்வுகளுக்கு ஒரு காரணமாகிறது.

இவர்களது இருப்பிடமான கழைக் கூத்து நகரின் மையப்பகுதியில் சிறு தெய்வத்தின் கோவில் ஒன்று உள்ளது. இதை இவர்கள் தங்கள் குல தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். கம்பத்தடி கருப்பன் என்னும் இந்த சிறு தெய்வம் தமிழகக் கிராமப்புற தெய்வங்களின் வழித்தோன்றல் ஆகும்.

தைமாதம் 10ஆம் நாளில் நடக்கும் திருவிழாவின் போது தமிழகத்தின் பிற பகுதிகளிருந்தும் இவர்களின் உறவினர்கள் வந்து இங்கு கூடி கருப்பனுக்கு பொங்கல் வைத்து, ஆடு வெட்டி சாங்கியம் செய்கிறார்கள். தங்களுடைய நம்பிக்கைகள் பொய்த்துப் போகாமல் இருக்கவும் தெய்வக் குற்றங்கள் நீர்த்துப் போகவும் இந்த வழிபாடு கருப்பனுக்கு செய்யப்படுகிறது. இவர்களின் இந்த சிறு தெய்வ வழிபாடு கிராமப்புற தமிழ் கலாச்சாரத்தின் வெளிப்பாடாகும். கிராமங்களின் காவல் தெய்வங்களாக வழிபடும் கருப்பண்ணசாமி, பெரிய கருப்பன், சின்ன கருப்பன் போன்ற குல தெய்வ வழிபாடாகவே இதை கருத வேண்டி உள்ளது. இவர்களது குடும்ப வாழ்வென்பது குழு மணமுறை அடிப்படையிலேயே உள்ளது. இங்கு எழும் காதல் கூட இந்த குழுக்களை தாண்டுவதில்லை. அவ்வாறு எல்லைகளை தாண்டி எழும் காதல் உணர்வுகள் அனுமதிக்கப் படுவதில்லை.

வழிபாடு, உணவு பழக்கவழக்கம், உடை அணிதல், கல்வி என கலாச்சார கூறுகளில் இவர்கள் தமிழர்களாகவே வாழ்கின்றனர். குஜராத்திகள் என்றால் பெரும் வட்டி கடை மற்றும் வணிக நிறுவனங்களை நடத்தும் பனியா கும்பல் என்கிற உண்மை. இந்த பாமர கூத்தாடிகளிடம் உடைந்து போகிறது.

தமிழ்த் தேசிய இனத்தோடு உற்பத்தி உறவுகளை அமைத்து கொண்டு இந்த பெரும்பான்மை சமூகத்தின் விழுமியங்களை வாழ்வியல் நடைமுறையாக கொண்டு வாழும் இந்த சிறு குழு தன்னை சராசரி தமிழ் குடியாக அங்கீகரிக்க வேண்டும் என்று கோருகிறது. ■

## உணவே மருந்து
## மருந்தே உணவு

பிணியுள்ளோர் பின் கண்டுள்ள உணவுகளை உண்டு உடல் நலம் பெறுங்கள். ஆறு சுவை ஆகாரம், ஆரோக்கிய ஆதாரம்.

| தாக்கும் நோய்கள் | தடுக்கும் உணவுகள் |
|---|---|
| அதிக இரத்தக்கொதிப்பு | - முள்முருங்கையிலை அடை, சாந்தி ஆசனம். |
| சர்க்கரை வியாதி | - பாகற்காய் கூட்டு, வஜ்ராகாரம் |
| புற்று பக்கவாதம் | - தூதுவளைத் துவையல் |
| குடல்புண் குழல் மாசு | - அகத்திக்கீரை சூப் |
| மூலம் பலமின்மை | - கம்புகளி, எண்ணெய் குளியல் |
| கற்கள், வாயுவலி, மாரடைப்பு | - கொள்ளு சுண்டல் |
| சளி நோய்கள் | - முசுமுசுக்கை இட்லி |
| தோல் நோய்கள் | - நன்னாரி காபி, மண்பற்று |
| தலைமுடிக்கோளாறுகள் | - கரிசாலைக்கூட்டு |
| கருப்பை கோளாறுகள் | - தராயிலைத்துவையல் |
| கால் ஆணி, குண்டுடல் | - பப்பாளிப்பிஞ்சு கூட்டு |
| ஆரம்ப யானைக்கால், இளைத்த உடம்பு | - வல்லாரைத் துவையல் |

மருத்துவர் தேவூர் மணிவாசகம்

## வெண்மணி நினைவுச் சின்னத்தில்
## த.தே.பொ.க. சார்பில்
## மலர் வணக்கம்

வெண்மணி கிராமத்திற்குச் சென்று அங்கு 1968ல் 44 பேர் உயிரோடு எரிக்கப்பட்ட குடிசை இருந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவு மேடையில் தோழர் பெ. மணியரசன் தலைமையில் திருத்துறைப்பூண்டி ஒன்றியத் தோழர்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாட்டில் தண்ணீர்ச் சிக்கல்

- பூ. அர.குப்புசாமி

"நீரின்றி அமையாது உலகு" என்றார் வள்ளுவர். தண்ணீரின் அவசியம் குறித்து யாருக்கும் சொல்ல வேண்டியது இல்லை. குடி நீராகவும், சமைக்கவும், உணவுப் பொருளை உற்பத்தி செய்யவும், தொழிற்சாலைகளை இயக்கவும், நீர் மிக மிக இன்றியமையாதது.

பூமிப் பந்தின் முக்கால் பகுதி நீராக உள்ளது. கால் பகுதியே நிலம். உள்ள நீரில் 90% நீரை பயன்படுத்த முடியாது. கடல் நீர் உவர் நீர். மீதியே மேற்சொன்னவாறு பயன்படுகிறது.

நீர் தேங்கி உள்ள அல்லது தேக்கப்பட்ட நிலையில் ஏரி, குளம், குட்டை, கண்மாய் எனப்படும். ஓடும் நீர் ஆறு, அருவி, கால்வாய், ஓடை என பல பெயர் பெறும். மூன்றாவது வகை நிலத்தடி நீராகும். இம் மூவகை நீருக்குமே மூலம் தமிழ்நாட்டைப் பொருத்தவரை மழை நீரே ஆகும். மழை நீர் ஆறாக ஓடவும், குளம் குட்டைகளை நிரப்பவும், நிலத்தடி நீரை சமன் செய்யவும் ஆகிறது. மழை வளம் பெருக மனிதனால் பெரிதாக இதுவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. பெய்யும் மழை குறையாமல் இருக்க காடுகளையும், வனங்களையும் குறிப்பாக மலைக்காடுகளை அழியாமல் பாதுகாப்பது அவசியம். ஆனால் சமவெளியிலும் சரி, கிழக்கு, மேற்கு மலைத் தொடர்ச்சிகளிலும் சரி காடுகள் அழிப்பு மும்முரமாக நடந்து வருகிறது. குறிப்பாக மலை சந்திப்புகளிலே (ஷோலே) உள்ள ஆதி காடுகள் அழிக்கப்படுவது மழை குறைந்து வருவதற்கு காரணமாகிறது.

குறைந்து வரும் மழையாலும், இதரக் காரணங்களாலும், நம் ஆறுகளில் வர வர நீர் வரத்து குறைந்து வருவது ஆய்ந்து அறியப்பட்டுள்ளது. கங்கை, சிந்து நதிகள் போல் தமிழகத்து ஆறுகள் பனி மலையிலிருந்து உருகிவரும் நீரைக் கொண்டு ஓடுபவைகள் அல்ல. நம் ஆற்று நீர் அனைத்தும் மழை நீரே. காட்டைக் காத்து மழை குறைவை தவிர்த்தால் அன்றி நீர் வரத்தைக்காக்க முடியாது. ஆற்றில் வருகின்ற நீர், குளம், குட்டை நீர், நிலத்தடி நீர் ஆகியவற்றின் மேலாண்மை, அறிவியல் பூர்வமாக அமைத்திருக்கவில்லை. காவிரி உட்பட பவானி, அமராவதி, நொய்யல் ஆகிய அனைத்து நதிகளின் கரைகளிலும் ரசாயனப் பொருளை அடிப்படையாக கொண்ட தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. அவற்றின் கழிவுகள் ஆற்று நீரை மாசுப்படுத்துகின்றன. அந்த நீரை உண்ண, உழவுக்கு பயன்படுத்த இயலாத நிலை ஏற்படுகிறது.

ஆற்று நீர் மாசு மாதிரியே, நிலத்தடி நீர் மாசும் அபாயகரமான நிலைக்கு இட்டுச் செல்கிறது. திருப்பூர், கரூர் போன்ற நகரங்களில் ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவுக்கு நிலத்தடி நீர் சுமார் 300 அடிவரை மாசுபடுத்தப்பட்டுள்ளது. அந்த நீர் மனிதனுக்கோ, கால்நடைகளுக்கோ, பயிர்களுக்கோ பயன்படாது. நீர் மாசுபடல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மாசு கட்டுப்பாடு என்பது கேலிக்குரியதாக உள்ளது.

பெருகிவரும் சுற்றுச் சூழல் கேடு குறித்து மக்களுக்கு விழிப்பு உணர்வு இல்லை. அதைத் தடுக்க அரசும் உருப்படியான நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இதனால் பயன்படும் நீரின் அளவு குறைந்து போகிறது. நகரமயமாதல் காரணமாக நகரத்திலும் சுற்றுப் புறத்திலும் அதை அடுத்து, ஓடும் ஆற்றிலும் உள்ள நீர் பாழ்பட்டு விடுகிறது.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நிலத்தடி நீரை அதிகம் எடுப்பதால், கடல் நீர் நிலத்துக்குள் வெகுதூரம் புகுந்து விடுகிறது. கடலூர் மாவட்டத்திலும் நெய்வேலி சுரங்கம் காரணமாக முன்பு நிலத்திற்கு மேல் நீர் தானாக கொப்பளித்து வரும் ஆர்ட்டீசியன் கிணறுகள் இருந்த பகுதி முழுவதும் காணாமல் போய் இப்போது கடல் நீர் நிலத்திற்குள் வெகுதூரம் புகுந்து விட்டது.

மீன் பண்ணைகள் அதை அடுத்து உள்ள விவசாய நிலங்களை பாழ்படுத்துகின்றன. விவசாய நிலம் சுருங்கி வருகிறது.

நிலத்தடி நீரை அதிகமாக பயன்படுத்துவதால், குழாய் கிணறுகள் அதிகமாக அமைக்கப்படுவதால், சுரண்டப்பட்ட நிலத்தடி நீர் போதுமான அளவு புதுப்பிக்கப்படாததால் நில மட்ட நீர் தன்மை வெகுவாக குறைந்து நிலம் பாலைத்தன்மை பெற ஏதுவாகிறது. கோவை, ஈரோடு முதலிய மாவட்டங்களில் நிலத்தடி நீர் ஆயிரம் அடிக்கு கீழே சென்றுவிட்டது. பிற இடங்களிலும் இப்படித்தான்.

இவை பற்றி எல்லாம் மக்களுக்கும் கவலையில்லை அரசியல்வாதிகளுக்கும் அக்கறையில்லை. ஆட்சி புரிவோருக்கும் ஆர்வம் இல்லை.

மன்னர் ஆட்சி காலத்திலிருந்த கண்மாய்கள், ஏரிகள், ஆயிரம் ஆயிரம். ஆனால் அவை தூர்ந்து மேடாகவும், ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியும், மழை நீர் தேங்க இடம் இன்றி



படிப்பகம்

www.padippakam.com

ஓடி கடலில் கலந்து வீணாகிறது. எண்பது சதம் விவசாயிகள் உள்ள நாட்டில், கிராமங்கள் மலிந்த நாட்டில் நீர் வளமும் அதிகம் இல்லாத நம் தமிழ்நாட்டில் இந்த ஏரிகளை தூர் எடுப்பதும், பராமரிப்பதும் முதன்மையானது ஆகும். ஆனால் நகர்ப்புறத்தையும் மேட்டுக் குடியினரையும் சார்ந்த இந்த அரசு இதை எல்லாம்பற்றி கவலைக் கொள்வதில்லை.

பெய்யும் மழையின் அளவு பெரிதாக ஒன்றும் இல்லை. தமிழ்நாடு தென்மேற்கு பருவக்காற்றால் அடைய வேண்டிய பயனை முழுவதும் அடைய முடியாமல் மேற்குத் தொடர்ச்சி மலை தடுத்து விடுகிறது. வடகிழக்கு பருவ மழையால் வைத்த வெள்ளாமைக்கு சேதாரமும் உண்டு. பெய்யும் மழை நீரைத் தேக்கவும், நிலத்தடியில் சுவரச் செய்யவும் (Harvesting the Rain) ஜப்பானிய முறையை மேற்கொண்டு மழை நீர் வீணாகாமல் தடுத்து சமூகத்திற்குப் பயன்பீடும்படி செய்ய அரசிடம் ஒரு திட்டமும் இல்லை. அதைப்பற்றி அரசியல் கட்சிகளுக்கு அக்கறையும் இல்லை.

ஆற்று நீரை பொருத்தவரை நம் தமிழ்நாட்டில் மழையை நம்பி உள்ள ஆறுகளேயாகும். அவற்றில் காவிரியில் நீரோட்டம் சுருங்கி வருகிறது. கன்னடர்கள் தங்கள் திட்டம் பூராவற்றையும் நிறைவேற்றி விட்டார்களேயானால் நீர் வரத்து குறைந்து ஒழுங்கற்றதாக ஆகி இப்போது தமிழகம் பயிரிடும் குறுவை, சம்பா, தாளடி ஆகியவற்றை முறையாக வைத்து எடுக்க முடியாத நாள் தூரத்தில் இல்லை.

பெரியாறு அணை நீரை மலையாளியிடம் இருந்து இப்போதைய அரசியல் அமைப்பை வைத்துக் கொண்டு மீட்பது மிகவும் கடினம். மேற்குத் தொடர்ச்சி மலையில் தமிழக எல்லையில் உற்பத்தி ஆகி கேரள எல்லைக்குள் சென்று பின் கிழக்கு நோக்கி வரும் ஆறுகள் பலவற்றை கேரளர்கள் மேற்கு நோக்கி திருப்பி விட்டார்கள். மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி மேற்கு நோக்கி ஓடி கடலில் கலந்து வீணாகும் ஆயிரத்து இரு நூறு டி.எம்.சி. நீரில் கால் பகுதி நீரையாவது அதாவது முன்னூறு டி.எம்.சி. நீரையாவது கிழக்கு நோக்கி தமிழகத்துக்கு திருப்பி விட்டால் தமிழ்நாட்டில் விவசாய நீர் பஞ்சம் நீங்கும். ஆனால் மலையாளிகள் அனைத்து கட்சியினரும் சேர்ந்து கூட்டாக ஒரே குரலில் ஒரு சொட்டு நீர் கூட தமிழகத்துக்கு தர மாட்டோம் என்று தீர்மானம் போட்டு உலகுக்கு உரத்து அறிவித்து விட்டார்கள்.

கேரள நீரை தமிழ்நாட்டுக்கு பயன்படுத்த வெள்ளைக்காரர் காலத்திலே 1900ம் வாக்கில் பக்தர் திட்டம் தீட்டப்பட்டு விட்டது. அது காகிதத்தில் உள்ளது. மலையாளிகள் கடலில் சென்று வீணாகும் நீரை தமிழகத்துக்கு தர மறுப்பதுடன் வந்து கொண்டு இருந்த பெரியாறு அணை நீரையும் தர மறுக்கிறார்கள். மேல் பவானி திட்டத்தையும் எடுத்துக் கொள்ள மறுப்பு கூறி வருகிறார்கள். பாலைவனமாக போய்விடுமோ என்று அஞ்சும் அளவுக்கு உள்ள கோவை, ஈரோடு மாவட்ட பகுதிகளுக்கு பலன்தரும் பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தையும் நிறைவேற்ற மளையாளிகள் ஒப்புதல் தர மறுக்கிறார்கள்.

நிலத்தடி நீர் ஆயிரம் அடிக்குக் கீழே போய்விட்ட மேட்டுப்பாளையம், அவினாசி, திருப்பூர், பவானிசாகர், கோபி, பெருந்துறை, காங்கேயம் தொகுதிகள் அடங்கிய வட்டாரம் சீக்கிரம் பாலைவனமாக மாறாமல் தடுக்க குறைந்தளவு **அத்திக்கடவு அவினாசி திட்டத்தையாவது** நிறைவேற்ற வேண்டும். பவானி நதியில் வரும் உபரி நீரை பயன்படுத்துவதே இத்திட்டம். அரசு இந்த வட்டாரத்தின் பல பகுதிகளை கருப்புக் கட்டம் கட்டி மின்சார இணைப்புக் கூட அங்கே தருவதில்லை. மக்கள் போராட்டத்திற்கு இம்மியும் செவி சாய்க்க வில்லை ஆளவந்தார்கள்.

பாண்டிய நாட்டு பஞ்சம் என்பது சங்ககாலம் தொட்டு இருப்பது. ஆண்டுதோறும் இராமநாத்புரம் மாவட்டத்தில் வறட்சியால் மக்கள் படும் துன்பம் கொஞ்சமல்ல. இந்தாண்டும் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் வட்டங்களில் குடிக்கக் கூட நீர் இன்றி மக்கள் அப்பகுதியை விட்டு வெளியேறி வருகின்றனர். பழைய தஞ்சை பகுதியிலேயே மக்கள் தொகை குறைந்து வருகிறது என்றால் இராமநாதபுரம் மாவட்டம் எந்த மட்டில்?

ஆறுகளுக்குப் புதிய ஆபத்து தீவிர மணற் கொள்ளையிலிருந்து ஏற்பட்டு வருகிறது. மணற் கொள்ளை ஆற்றின் தன்மையை அழிக்கும். இருபுற விவசாயத்தையும் நாசமாக்கும். ஆற்றின் பயன்பாடு வெகுவாக குறையும்.

மேலே சொன்ன நிலைமை எல்லாம் நீடித்தால் தமிழ்நாட்டில் கோவை, ஈரோடு மாவட்டங்களில் பெரும் பகுதியும், பழைய மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரும் பகுதியும் 50- 60 ஆண்டுகளில் பாலைவனமாகப் போய்விடும் என நீரியல் நிபுணர்கள் அடித்துக் கூறுகிறார்கள்.

ஏன், இப்போதே உத்தமபாளைம் வட்டத்தில் ஒரு பகுதியில் 30,000 ஏக்கர் நிலத்தில் பாலை படரத்தொடங்கி விட்டது. அதை தவிர்க்க வெளிநாட்டு நிபுணர்கள் அங்கு வந்து தீவிரமாக பணியாற்றி வருகிறார்கள்.

இந்த நிலை குறித்து கவலைப்பட தலைவர்கள் இல்லை. இந்நிலை ஏற்படின் தமிழகத்திற்கு ஏற்படும் கேடுகள் எண்ணற்றவை. ஆனால் நாம் அடுத்தத் தேர்தலைப்பற்றி கவலைப்படுவதில்லை. அடுத்தத் தலைமுறையைப் பற்றி கவலைப்ப்படுகிறோம் என்று வெற்றுவாய் வீச்சுக்காட்டும் ஆட்சி அமைப்பை வைத்துக் கொண்டு நாம் தமிழகத்தின் நீர் வளத்தை எப்படி காக்க முடியும்?.

தமிழ் இன உணர்ச்சி என்பது தமிழகத்தின் நீர், நில வளத்தைக் காப்பது என்று பொருள்படும். அனைத்தம்சங்களை ஒருங்கிணைத்த உருப்படியான தமிழ்த்தேசிய எழுச்சியே இப்படிப்பட்ட சிக்கல்களுக்கு விடை காணும்■



படிப்பகம்

www.padippakam.com

# தமிழக இளைஞர் முன்னணி மாநாட்டு விளக்கக் கூட்டங்கள்

**தஞ்சாவூர்.**

தமிழக இளைஞர் முன்னணி நான்காவது தமிழக மாநாடு டிச 16,17 நாட்களில் திண்டிவனத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டை விளக்கி 3.12.2000 (ஞாயிறு) தஞ்சை கல்லுக்குளம் அருகில், மாநாட்டு விளக்கப் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

தோழர் ரெ. சிவராசு (மாவட்டத் தலைவர் த.இ.மு.) தலைமை தாங்கினார்.

தோழர்கள் பெ. மணியரசன் (பொதுச் செயலாளர் த.தே.பொ.க.) ச.யோகநாதன் (தலைமைச் செயற்குழு, த.தே.பொ.க.) நா.வைகறை (பொதுச்செயலாளர் த.இ.மு.) இரா.சு. முனியாண்டி (நகரச் செயலாளர். த.இ.மு.) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தோழர் ஆ. வேலாயுதம் (நகரத் தலைவர் த.இ.மு.) வரவேற்புரையாற்றினார். தோழர் தெ.காசிநாதன் நன்றியுரை கூறினார்.

**சத்தியமங்கலம்**

12.12.2000 அன்று சத்தியமங்கலம் வாரச்சந்தை, பேருந்துநிலையம், கோட்டு வீராம்பாளையம் பகுகளில் விளக்கத் தெருமுனைக்கூட்டங்கள் நடைபெற்றன.

தோழர் வெண்முகில் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில் ச. அர மணிபாரதி (பொதுக்கூழு உறுப்பினர் த.தே.பொ.க.) நா.வைகறை ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் ம.செந்தமிழ் ஸ்டாலின் நன்றி கூறினார்.

**காஞ்சிபுரம்**

12.12.2000 காஞ்சிபுரத்தில் போல்கேட், மேட்டுத்தெரு, பேருந்துநிலையம் பகுதிகளில் விளக்கத் தெருமுனைக் கூட்டங்கள் தோழர் இரா. வெங்கடேசன் (மையக்குழு, த.இ.மு.) தலைமையில் நடைபெற்றது

தோழர் ச. யோகநாதன் அ.பத்மநாபன் (பொதுக்குழு த.தே.பொ.க.) குழ. பால்ராசு (பொதுக்குழு த.தே.பொ.க.) இரா. பாலசுப்பிரமணியம் (தமிழ் கலை இலக்கியப் பேரவை) அ.வளவன் (பொதுச்செயலாளர் த.மா.மு.) சு.தமிழ்ச் செழியன் (மையக்குழு த.மா.மு.) பகலவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தோழர் ச.பொன்னம்பலம் நன்றியுரை கூறினார்.

**சோத்துப்பாக்கம்**

சோத்துப்பாக்கம் கூட்டுச்சாலையில் 9.12.2000 அன்று தோழர் வேணு (வட்டஅமைப்பாளர் த.இ.மு.) தலைமையில் நடைபெற்ற மாநாட்டு விளக்கத் தெருமுனைக்கூட்டத்தில் தோழர்கள் மு.கந்தசாமி (திண்டிவனம் நகரச் செயலாளர் த.தே.பொ.க), ச.யோகநாதன், நா.வைகறை, இர.இனியன் (துணைத்தலைவர் த.இ.மு.) பரமசிவம், மூர்த்தி, ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

காஞ்சி கலைக்குழுவினரின் எழுச்சி இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

**சென்னை**

சென்னை எம்.ஜி.ஆர் நகரில் மாநாட்டு விளக்கத் தெருமுனைக்கூட்டம் தோழர் தி.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் ச.யோகநாதன் இரா.பால சுப்ரமணியம், அ.பத்மநாபன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### மயிலாடுதுறை
## வழக்கறிஞர் இராம தாசு காலமானார்

தமிழ் இன விடுதலைக் கழக நிறுவனரும், தடாவில் சிறைப்பட்ட தமிழ்இன உணர்வு இளைஞர்களை மீட்கத் தமிழகமெங்கும் வழக்கு நடத்தியவரும் தந்தை பெரியாரின் வழித்தடத்தில் சுய மரியாதைக் கொள்கைகளைப் பரப்பியவருமான மயிலாடுதுறை வழக்கறிஞர் தி.இராமதாசு அவர்கள் 4.12.2000 அன்று. மயிலாடுதுறையில் அவரது இல்லத்தில் காலமானார். நோய்வாய்ப்பட்டிருந்த அவருக்கு உயரிய சிகிச்சை அளித்தும் பலனின்றி இயற்கை எய்தினார்.

5.12.2000 பகலில் அவர் இல்லத்தின் முன் தோழர் பெ.மணியரசன் (த.தே.பொ.க) தலைமையில் நடந்த இறுதி வணக்கக் கூட்டத்தில் தோழர்கள் ஆறுச்சாமி (தமிழ்நாடு தி.க.), நாக. இரகுபதி (பெ.தி.க.), முரளி (தமிழர் உரிமை இயக்கம்), புதுவை சுகுமாறன், புதுவை கதிர், சு. மணி வழக்குரைஞர் கோபால கிருட்டினன், பேரா. த. செயராமன், இரெத்தினகிரி (பகுத்தறிவாளர் கழகம்) மற்றும் திராவிடர் கழக மாவட்டத் தலைவர்கள், செந்தமிழ்ப் பேரவைத் தோழர்கள், உள்ளூர் பிரமுகர்கள் இரங்கல் உரையாற்றினர். திரளானோர் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சிக்காரன்

- நா.வைகறை

அம்மன், பாளையத்தம்மன் என்று மூட நம்பிக்கை கருத்துகளை வலியுறுத்தி வெளியாகிக் கொண்டிருக்கும் திரைப்படங்களுக்கு மத்தியில் பகுத்தறிவுக் கருத்துகளையும் பெரியார் சிந்தனைகளையும் வலியுறுத்தி வேலு பிரபாகரனின் இயக்கத்தில் வெளி வந்துள்ள திரைப்படம் புரட்சிக்காரன். திராவிடர் கழகப் பொருளாளர் கோ. சாமிதுரை தயாரித்துள்ளார்.

பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்த இராமானுஜத்தின் (வேலுபிரபாகரன்) விதவை தங்கை கல்யாணியை இஸ்லாமிய இளைஞன் காதல் திருமணம் செய்ய விரும்புகிறான். மதம், சாதி இவைகளைக் காரணம் காட்டி திருமண ஆசை இருந்தும் கல்யாணி (குஷ்பு) மறுக்கிறாள். கல்யாணியின் தந்தை தாத்தாச்சாரி மகள் தவறு செய்துவிட்டதாக கண்டிக்க கல்யாணி தற்கொலை செய்து கொள்கிறாள். இந்நிகழ்ச்சி இராமானுஜத்திற்கு மதம், சாதிய சடங்குகள் மீது வெறுப்பை உண்டாக்குகிறது.

பச்சை சாமி என்ற போக்கிரி சிங்க முனிவன் (கிரிதரன்) என்னும் பெயரில் பண்ணையார் (ராதாரவி) தர்மலிங்கத்தோடு கூட்டணி வைத்துக் கொண்டு உல்லாச வாழ்க்கை நடத்துகிறான். இவர்களின் கயமை செயல்களைக் கண்டிக்கவும் மக்களை கடைத் தேற்றவும், பகுத்தறிவு வாதி அண்ணா (சத்தியராஜ்) வருகிறார்.

அண்ணாவின் பகுத்தறிவு கருத்துகள் பொது மக்களை மட்டுமல்லாது இராமானுசத்தையும் ஈர்க்கிறது. இராமானுஜம் பூணூலை அறுத்து எறிந்துவிட்டு அண்ணாவோடு சேர்ந்து சிங்க முனிவனையும் பண்ணையாரையும் எதிர்க்கிறார்.

வள்ளி (நீனா) என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணை திருமணம் செய்து கொண்டு இராமானுசம் தமிழ் மணியாக மாறுகிறார். பண்ணையாரும் சாமியாரும் திட்டமிட்டு கலவரத்தை உண்டு பண்ணுகின்றனர். இதில் அண்ணா, வள்ளி படுகொலை செய்யப்படுகின்றனர்.

தமிழ் மணி மீது தீவிரவாதி முத்திரைக் குத்தப்பட காட்டிற்குள் தலைமறைவாகிறார்.

நாட்டின் எல்லா கேடுகளுக்கும் கடவுள் நம்பிக்கைகளும் மத சனாதானங்களும் தான் காரணம் என்று கருதும் தமிழ்மணி இந்து, கிறித்துவர் மற்றும் இஸ்லாமிய தலைவர்களை காட்டிற்குள் கடத்தி செல்கிறார்.

பத்திரிக்கையாளர் கனிமொழி (ரோஜா) மூலம் சிங்க முனிவன் பித்தலாட்டங்களையும், மதம், கடவுள், சாதி ஏற்படுத்தும் கொடுமைகளையும் அம்பலப்படுத்துகிறார். தமிழ் மணியின் கருத்துக்கு ஆதரவாக மக்கள் அணி திரள்கின்றனர். முதலமைச்சர் பொது மன்னிப்பு வழங்க ஆணையிடுகின்றார். தமிழ் மணிக்கு பொது மன்னிப்பு வழங்கும் விழாவில் தமிழ் மணியின், தம்பி இராம கிருஷ்ணன் அண்ணனை சுட்டுக் கொல்லுகிறான். இது தான் படத்தின் கதை.

பெரியாருடைய கருத்துகளை வெளிப்படுத்தும் விதத்தில் ஜெய தேவியின் உரையாடல்களும் ஜனகராஜ், செந்தில் பங்கேற்கும் வீரப்பனின் நகைச்சுவைகாட்சிகளும் அருமை.

வைரமுத்து எழுதியுள்ள ‘கடவுள் இல்லடா’, ‘மண்ணுக்கு நாமதான்’ என்ற பாடல்களும் புரட்சிக் கவிஞரின் ‘தூங்கும் புலியை’ என்ற பாடலும் அருமை. இப்பாடல்களுக்கு வித்யாசாகர் சிறப்பாக இசை அமைத்துள்ளார்.

வேலுபிரபாகரன், சத்தியராஜ், ராதிகா பேசும் வசனங்கள் பொதுக் கூட்டத்தில் பேசுவது போன்ற பாணியில் அமைந்திருப்பதைத் தவிர்த்து இருக்கலாம் பல காட்சிகள் திராவிடர் கழக பொதுக் கூட்டத்தை நினைவு படுத்துகின்றன. இன்னும் கொஞ்சம் கலைத் திறனோடு அனைவரும் பார்க்கும் வகையில் திரைக்கதை அமைத்திருக்கலாம்.

மத நம்பிக்கைகளுக்கு எதார்த்தமான சமூகக் காரணங்கள் உண்டு. இந்த காரணங்கள் நிலைத்து நிற்கும் வரையில் மத நம்பிக்கை நிலைத்து நிற்கும். வெறும் தத்துவார்த்த பிரச்சாரத்தால் மத நம்பிக்கையை ஒழித்து விட முடியாது. மத நம்பிக்கைகள் இல்லாது ஒழிய வேண்டுமானால் அவற்றிற்கு அடிப்படையாக நிலைத்து நிற்கும் சுரண்டலும் ஆதிக்கமும் நிறைந்த சூழ்நிலை மாற வேண்டும். மதத்தின் சமுதாய வேர்களை ஆணி வேர் பக்கவேர், சல்லி வேரோடு கிள்ளி எறிகிற நோக்கோடு நடைபெறும் போராட்டத்தை பகுத்தறிவுப் பிரச்சாரத்தோடு இணைக்க வேண்டும். அப்போதுதான் மதம் மெல்ல மெல்ல மறையும்.

புரட்சிக்காரனோ வெறும் பிரச்சாரத்தாலேயே முடிக்க முனைகிறார்.■

படிப்பகம்

www.padippakam.com



# இருள்

*- சிதம்பரன் கி.*

இருட்டில் மட்டுமே
தேடுவோம்
எம் தலைவனை

வெளிச்சத்தில் அவர்
மினுமினுக்க
இருளே எங்களை
விழுங்க

தேராக அவர்
சக்கரமாக நாங்கள்

நிகழ் கால வாழ்வு அவருக்கு
கனவு எங்களுக்கு

அரிதாரத்தில்
அழகுச் சொற்றொடரில்
மயங்கினோம்
செயலை
தேடியதுமில்லை கண்டதுமில்லை

வாழ்க்கையே கனவாகி
கனவே வாழ்க்கையாகி
தொலைந்துபோன வாழ்க்கையை
லாட்டரியில் பண்டிகையில்
மில்லியில் திரையில்
பான்பராக்கில்
தேடித் தேடித் தேடி....

அட்டைக் கத்தியை
அஞ்சாநெஞ்சனாக்கினோம்
அடாவடிக்காரனை
அரசியல்வாதியென்றோம்
பட்டிமன்றங்களே
திட்டங்களாயின

மானத்துக்காக போராடி
மருந்துகளற்று
சாகும் மனிதனைத்
தெரியாது
மனதுக்குள் மத்தாப்பாக
கரையும்
மங்கலத் திரைக்காட்சிகளே
கோலம்

இருட்டைத் தேடி
இருட்டைத் தழுவி
இருட்டைத் தடவி
இருட்டேயாகி

அரிதர்ரம்
அவதாரம்
அவமானம்

உடை
நொறுக்கு
கிழி
கட்டறு
இருட்டை
விரட்டு

## விழி சிவந்தால் வழி சிவக்கும்

*- ஆலங்குளம் பாஸ்கரன்*

வருமினத்தார் வாழத்தான்
வழிதிறந்தாய் தமிழா
உருவிழந்தாய் ஒளியிழந்தாய்
பொலிவிழந்தாய் தமிழா

அறிவிழந்தார் உன் மக்கள்
அடிமைகளாய் வீழ்ந்தார்
ஆதிக்க இனத்தாரின்
காலடியில் சேர்ந்தார்.

பெருமைமிகு தமிழினத்தின்
அருமையெல்லாம் போச்சே!
சிறுமதியார் சதிவலையில்
சிறையிருக்கலாச்சே!

உரிமைகளை இழந்தபின்னும்
பொறுமை நிலை கொண்டாய்!
வெறுமைநிலை அடைந்திடவோ
ஒருமைநிலை கண்டாய்?

களைகளென தமிழ்ப்பகைவர்
தழைத்திடுதல் கண்டும்
இமைச்சிறையில் இருவிழிகள்
உறங்குவதோ இன்னும்?

விழி சிவந்து மொழிசிவந்து
வழி சிவக்க வேண்டும்
இழிநிலையைக் கொளுத்த - தமிழ்
இனம் சிவக்க வேண்டும்.

படிப்பகம்